20TH MARCH 2026

www.uthayam.lk

உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 102 | பக்கங்கள் - 18 | editor.uthayam@gmail.com




வாசகர்களுக்கு ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் நல் வாழ்த்துக்கள்!

- ஈத் முபாறக் -

# பயங்கர கட்டத்தை நோக்கி மத்திய கிழக்கு மோதல்; எரிவாயு எண்ணெய் குதங்கள் மீது மாறிமாறி தாக்குதல்

## உலகளாவிய நெருக்கடி நிலை தோன்றும் அபாயம்

(சிறப்பு நிருபர் எம்.என். முஹம்மட்)

மத்திய கிழக்கு யுத்தம் தற்பொழுது படிப்படியாக பிராந்திய யுத்தத்தை தாண்டி உலகளாவிய யுத்தமாக மாறும் ஆபத்தை எதிர்கொண்டிருக்கிறது. குறிப்பாக உலகின் பெரிய எண்ணெய் எரிவாயு குளங்கள் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து நடாத்திய தாக்குதல் நிலைமையை மிகவும் பயங்கரமான ஒரு கட்டத்திற்கு தள்ளி இருக்கிறது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக ஈரான், கத்தார், சவுதி, குவைத், பஹ்ரைன் போன்ற கல்ப் நாடுகளில் உள்ள சகல எண்ணெய் குளங்கள் மீதும் தாக்குதல் நடாத்தி வருகின்றது. இதனால் மிகப்பெரிய உலகளாவிய நெருக்கடி ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரித்து வருவதாக செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதே நேரம் இந்த யுத்தம் குறிப்பாக பல பரிமாணங்களை பெற்றுள்ளதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. காஸாவில் காணப்படக்கூடிய ஹமாஸ் அமைப்பு தனது முழுமையான ஆதரவை ஈரானுக்கு தெரிவித்திருப்பதானது அவர்கள் எந்த நேரத்திலும் போரில் இணையலாம் என்ற அடையாளத்தை காட்டுகிறது. இதேவேளை லெபனானிலுள்ள ஹிஸ்புல்லாக்கள் தொடராக மிக கடுமையான சமரில் இஸ்ரேல் படைகளுடன் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சண்டைகளின் போது இஸ்ரேலிய படைகளுக்கு பலத்த இழப்பு ஏற்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேபோன்று ஹிஸ்புல்லாக்கள் தங்களுடைய ஏவுகணையை ரொக்கெட் வீச்சுகளை பெருமளவுக்கு அதிகரித்துள்ளன. எப்போதும் இல்லாதவாறு மிக தூரத்தே உள்ள அஸ்கலான் நகரின் மீதும் ஹிஸ்புல்லாக்கள் தாக்குதல் நடத்தி இருப்பதும் பல தாங்கிகளை அழித்திருப்பதும் இஸ்ரேலுக்கு மிகப்பெரிய இராணுவ ரீதியான

04ம் பக்கம்பார்க்க...

# மத்திய கிழக்கு மோதல்களின் போது நாம் நடுநிலை வகித்தோம்

## அமெரிக்க - ஈரான் கோரிக்கைகளை நிராகரித்தோம்

### பாராளுமன்றில் ஜனாதிபதி தெரிவிப்பு



சர்வதேச மோதலின் போது இலங்கை நடுநிலை வகித்ததாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் மற்றும் அதன் விளைவாக உலக நாடுகள் எதிர்நோக்கும் பல்வேறு நிலைமைகள் குறித்து ஜனாதிபதி பாராளுமன்றில் உரையாற்றிய

02ம் பக்கம்பார்க்க...

# சர்வதேச சட்டத்தை மீறிய தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கம் ஏன் அறிக்கை வெளியிடவில்லை

## சஜித் பிரேமதாச சபையில் கேள்வி



பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ஈரான் போர்ச் சூழலுக்கு மத்தியில் நடுநிலையாக நடந்து கொண்டதாக குறிப்பிட்டார். இருப்பினும், சர்வதேச சட்டத்தை மீறி நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து அரசாங்கம்

02ம் பக்கம்பார்க்க...

# ரணிலுக்கு சிங்கப்பூரில் அறுவைச் சிகிச்சை!

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிங்கப்பூரில் வெற்றிகரமாக நடைபெற்ற அறுவை சிகிச்சைக்கு பின்னர் நலமுடன்

02ம் பக்கம்பார்க்க...

# இஸ்லாமிய நாடுகள் அனைத்தையும் குறி வைக்கும் ஈரான்

## சவூதி அரேபியா குற்றச்சாட்டு



சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் இளவரசர் ஃபைசல் பின் ஃபர்ஹான் அல் சவுத் ஈரானைக் கடுமையாகச் சாடுகிறார்.

இஸ்லாமிய நாடுகளைத் தாக்கிக்கொண்டே, இஸ்லாமியக் கொள்கைகளைப் பாதுகாப்பதாக அவர்கள் எப்படி உரிமை கோருகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

அவர்கள் ஒரே ஒரு

03ம் பக்கம்பார்க்க...

# மத்திய கிழக்கு புறப்படவுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள்

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழலுக்கு மத்தியில் அங்கு பணிபுரியும் இலங்கையர்களின் நலன் குறித்து விசாரிப்பதற்காக எதிர்க்கட்சி

02ம் பக்கம்பார்க்க...

# அண்டை நாடுகள் மீதான தாக்குதல்களை ஈரான் உடன் நிறுத்த வேண்டும்

## 12 முஸ்லிம் நாடுகள் வலியுறுத்து

ஈரானின் அண்மைக்கால ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை

02ம் பக்கம்பார்க்க...

# ஈரான் தூதரக பணியாளர்களை உடன் வெளியேற கட்டார் பணிப்பு

கட்டாரில் உள்ள ஈரானிய இஸ்லாமியக் குடியரசின் தூதரக பணியாளர்களை உடனடியாக நாட்டிலிருந்து வெளியேறுமாறு கட்டார் அரசாங்கம்



அமானா வங்கியில் வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும்

# பிறை தென்படவில்லை; சனியன்று பெருநாள்

## பிறைக்குழு ஏகமனதாக முடிவு!




(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

புனித ஸவ்வால் மாதத்திற்கான தலைப் பிறை தென்படவில்லை நாளை சனிக்கழமை (21) நோன்புப் பெருநாள் ஹிஜ்ரி 1447 புனித ஸ வ்வால் மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு நேற்று 19ஆம் திகதி வியாழக்கிழமை மாலை மஃரிப் தொழுகைக்கு பிறகு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் பிறைக் குழு தலைவர். மௌலவி எம்.பி.எம். ஹிஷாம் அல் பத்தாஹி தலைமையில் இடம்பெற்றது

இதன்போது நாட்டின் எப்பாகங்களிலும் ஸவ்வால் மாதத்திற்கான தலைப் பிறை தென்பட்டபதற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெறவில்லையென பிறைக் குழு அறித்தது.

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பிறை பார்க்கும் மாநாட்டில் பெரிய பள்ளிவாசலின் தலைவர் தாஹிர் ரசீன் உள்ளிட்ட பள்ளிவாசலின் நம்பிக்கையாளர்கள். பிறைக் குழு உறுப்பினர்கள் .அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் மௌலவி புர்ஹானுதீன் உள்ளிட்ட பிரதிநிதிகள், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகள், இலங்கை வளிமண்டல திணைக்கள அதிகாரி மொஹமட் சாலிஹீன், மற்றும் ஏனைய பள்ளி வாசல்கள், ஸாவியாக்கள், தரீக்காக்களின் பிரதிநிதிகள், மேமன் சங்க பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பிறை தென்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை என்பதனையும் புனித ரமழானை நாளை வெள்ளிக்கிழமை 30 ஆக பூர்த்தி செய்து நாளை மறுதினம் சனிக்கிழமை (21) புனித நோன்புப் பெருநாளை கொண்டாடுமாறு இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு பிறைக் குழுத் தலைவர் உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

### அண்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையாகக் கண்டிக்கும் வகையில், அரபு மற்றும் முஸ்லிம் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் அவசர ஆலோசனைக் கூட்டம் சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் நடைபெற்றது.

மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் பாதுகாப்பு பதற்றத்தின் மத்தியில் நடைபெற்ற இந்த கூட்டம், பிராந்திய நிலைத்தன்மைக்கான முக்கிய தூதரக நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

2026 மார்ச் 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, சவுதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃ பர்ஹான் தலைமை தாங்கினார்.

சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், குவைத், பஹ்ரைன், ஜோர்டான், எகிப்து, லெபனான், சிரியா, துருக்கி, பாகிஸ்தான் மற்றும் அஜர்பைஜான் ஆகிய 12 நாடுகளின் உயர்மட்ட பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

கூட்டத்தின் போது, ஈரானால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல்கள் குறித்து கடுமையான கண்டனங்கள் வெளியிடப்பட்டன.

குறிப்பாக, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் விநியோக மையங்கள் மற்றும் சர்வதேச விமான நிலையங்கள் போன்ற பொதுமக்களின் அத்தியாவசிய கட்டமைப்புகள் இலக்காகக் குறிவைக்கப்பட்டதாக அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர்.

இத்தகைய நடவடிக்கைகள் அண்டை நாடுகளின் இறையாண்மையை மீறுவதோடு, சர்வதேச சட்டங்களுக்கும் விரோதமானவை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில், ஈரான் தனது ராணுவத் தாக்குதல்களை உடனடியாகவும் நிபந்தனையின்றியும் நிறுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மேலும், வெளிநாடுகளில் செயல்படும் ஆயுதக் குழுக்களுக்கு வழங்கப்படும் நிதி மற்றும் ஆயுத உதவிகளை நிறுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஹார்முஸ் நீரிணை மற்றும் பாப் அல்-மந்தேப் பகுதிகளில் சர்வதேச கடல் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது என எச்சரிக்கப்பட்டது.

அதேவேளை, ஐநா சாசனத்தின் 51வது விதியின் அடிப்படையில், தாக்குதல்களுக்கு உள்ளான நாடுகள் தங்களின் தற்காப்பு உரிமையை பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் இந்த கூட்டறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மொத்தத்தில், ரியாத்தில் நடைபெற்ற இந்த அவசர மாநாடு, மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் பதற்றத்தை குறைக்கும் நோக்கில் எடுக்கப்பட்ட முக்கியமான ஒருங்கிணைந்த நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.

ஈரான் சர்வதேச விதிமுறைகளை மதித்து, அண்டை நாடுகளுடன் அமைதியான உறவை பேண வேண்டும் என்பதையும் இந்த மாநாடு வலியுறுத்தியுள்ளது.

### ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி அறிக்கையொன்றினை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

ரணில் விக்ரமசிங்க இன்னும் சில நாட்களுக்கு மருத்துவமனையில் மருத்துவக் கண்காணிப்பில் இருப்பார் என்றும் அக்கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் பிறந்த நாள் (மார்ச் 24 ) என்றும், மத அனுஷ்டானங்களுடன் அந்நாளை கொண்டாடவள்ள தமது கட்சி ஆதரவாளர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று (19) கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அறுவை சிகிச்சை மிகவும் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகவும், முன்னாள் ஜனாதிபதி விரைவில் குணமடைய வாழ்த்துவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க, மேலதிக மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூர் நோக்கிப்புறப்பட்டு சென்றிருந்த நிலையில், புதன்கிழமை (18) வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைகளைப் பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

ரணில் விக்ரமசிங்கவுக்கு நேற்று இதய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றதாகவும்,இந்த அறுவை சிகிச்சை பல மணி நேரம் நீடித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், அவர் மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளைத் தொடர்ந்து, அவர் சுமார் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து ஓய்வு எடுப்பார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கடந்த வாரமும் இலங்கையிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் மூன்று நாட்கள் தங்கியிருந்து மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மத்திய கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணம் செய்ய முடிவு செய்துள்ளது .

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, வளைகுடாப் பிராந்தியத்தில் உள்ள இலங்கைத் தூதரகங்களின் ஆதரவைக் கோரி, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு நேற்று (19) கடிதமொன்றினை அனுப்பியுள்ளார்.

பைசர் முஸ்தபா, அஜித் பி. பெரேரா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று தங்களது சொந்தச் செலவில் பயணம் செய்யவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிரி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

துபாய், பஹ்ரைன், அபுதாபி, சவூதி, கத்தார், தோஹா, ஷ ார்ஜா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் நலன் குறித்து விசாரிப்பதும், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட தூ தரகங்களுக்குத் தெரிவிப்பதுமே இந்தப் பயணத்தின் நோக்கம் என்று தயாசிரி ஜயசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

வாசகர்களே!

**உதயம் பத்திரிகை குறித்தான உங்களது நேர்த்தியான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றது.**

**உங்களது கருத்துக்கள் மற்றும் செய்திகளை கீழுள்ள மின்னஞ்சல் முகவரியூடாக அனுப்பி வைக்கவும்.**



## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ ரீதியிலான அறிக்கையொன்றையேனும் ஏன் இன்னும் வெளியிடவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது. சர்வதேச சட்டத்தைப் பாதுகாப்பதற்கான நெறிமுறைச் செயல்முறையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என்பது கண்டனத்துக்குரிய விடயமாக அமைந்து காணப்படுகின்றன.

இச்சமயம் சர்வதேச சட்டங்களை மீறி நடந்து கொள்ளும் விடயத்தை கண்டிப்பதற்கு நாம் அஞ்சக்கூடாது. இன்று (20) பாராளுமன்றத்தில் ஜனாதிபதியின் உரைக்கு பதிலளிக்கும் வகையில் உரையாற்றிய வேளையிலயே நான் இவ்வாறு தெரிவித்தேன். எனது இன்றைய உரையில் நாடு தற்போது சந்தித்து வரும் எரிசக்தி நெருக்கடி உட்பட பல பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில், அரசாங்கத்திடம் பல்வேறு யோசனைகளை முன்வைத்தேன். மக்களின் நலனுக்காக எடுக்கும் ஆக்கப்பூர்வமான சகல தீர்மானங்களுக்கும் எமது ஆதரவைத் தருவதற்கு நாம் எதிர்க்கட்சியாக நடவடிக்கை எடுப்போம் என்றும் அரசாங்கத்திடம் தெரிவித்தேன்.

## இஸ்லாமிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டை மட்டும் தாக்கவில்லை. சவூதி அரேபியா, பஹ்ரைன், குவைத், கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், ஓமான், லெபனான், ஜோர்டான், ஈராக், துருக்கி இவை அனைத்தும் இஸ்லாமிய நாடுகள், மேலும் அனைத்தும் குறிவைக்கப்பட்டுள்ளன.

இந்தப் போருக்கு முன்பே, இஸ்லாமிய உலகிற்கு ஈரானின் பங்களிப்பு என்னவாக இருந்தது?

அவர்கள் யேமனில் உள்ள ஹூதி போராளிக் குழுக்களை ஆதரித்தார்கள். அவர்கள் ஈராக்கில் உள்ள போராளிக் குழுக்களை ஆதரித்தார்கள் - இப்போது அவர்கள் ஈராக்கியப் பகுதியைத் தாக்குகிறார்கள்.

அவர்கள் ஹிஸ்புல்லா மூலம் லெபனானில் தலையிட்டுள்ளனர் அரசியல் முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கைப்பற்றியது மட்டுமல்லாமல், சவூதி அரேபியா உட்பட பிராந்தியம் முழுவதும் ஸ்திரத்தன்மையைக் குலைக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

இதற்கு மிகத் தெளிவான உதாரணங்களில் ஒன்று சிரியாவில் ஈரான் மற்றும் ஹிஸ்புல்லாவின் பங்கு.

அப்படியானால், இதுபோன்ற நடவடிக்கைகள் நடக்கும்போது, முஸ்லிம் உலகிற்கான இந்த ஆதரவு என்று சொல்லப்படுவது எங்கே?

தங்கள் சொந்த மக்களை ஒடுக்கும் ஆட்சிகளை ஆதரித்து, லெபனானில் அரசியல் பிரமுகர்களைக் கொன்று, ஈராக்கின் வளர்ச்சியைத் தடுக்கும் ஆயுதக் குழுக்களுக்கு வலுவூட்டும் அதே வேளையில், இஸ்லாமியக் கொள்கைகளை ஆதரிப்பதாக அவர்களால் எப்படி உரிமை கோர முடியும்?

இஸ்லாமியக் கொள்கைகளுக்கு உண்மையான ஆதரவு இருப்பதாக நான் எதையும் காணவில்லை. இவை வெறும் மறைப்பிற்காகப் பயன்படுத்தப்படும் கோஷங்கள் மட்டுமே. உண்மையில், இந்தக் கருவிகள் தாங்கள் பாதுகாப்பதாகக் கூறும் கொள்கைகளுக்காக அல்ல.

## மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரத்தில் ஆரம்பத்திலிருந்தே எமது நிலைப்பாடு நடுநிலைமை என்பதாகும்.

எமது தாய்நாட்டின் கௌரவம், நீதி மற்றும் சர்வதேச அங்கீகாரம் என்பவற்றை நாம் எமது நடுநிலைமையைப் பாதுகாப்பதன் மூலமே பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே, எந்தவொரு அழுத்தத்தின் மத்தியிலும் இந்த நடுநிலைமை சீர்குலைய நாம் இடமளியோம்.

நாங்கள் ஏதோ ஒரு தரப்பிற்கு சார்பாக இருக்கிறோம் என்றும், சில தீர்மானங்களை உரிய நேரத்தில் எடுக்கவில்லை என்றும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

அவை முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை.

ஈரானின் இரண்டு கப்பல்களை இலங்கை கடற்பரப்புக்குள் அனுமதிக்குமாறு கடந்த மாதம் 26 ஆம் திகதி எங்களிடம் ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டது.

மார்ச் 09 மற்றும் 13 ஆம் திகதிகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு நல்லெண்ண விஜயமாக குறித்த கப்பல்கள் இலங்கைக்கு வர விரும்புவதாக ஈரான் அதிகாரிகள் கோரினர்.

குறித்த கோரிக்கைக்கான அனுமதி வழங்குவது குறித்து நாம் ஆராய்ந்து கொண்டிருந்தோம்.

அன்றைய தினம் மாலை வேளையிலேயே அமெரிக்காவும் ஒரு கோரிக்கையை முன்வைத்தது.

கடற்படைக்குச் சொந்தமான இரண்டு போர் விமானங்களை மத்தள விமான நிலையத்தில் தரையிறக்குவதற்கு அனுமதி கோரினர்.

எமது மேசை மீது இரண்டு கோரிக்கைகள் இருந்தன.

ஒன்று மார்ச் 9-13 காலப்பகுதியில் ஈரானிய கப்பல்கள் இலங்கைக்குள் நுழைவதற்கான அனுமதி, மற்றொன்று அமெரிக்க போர் விமானங்கள் மத்தளத்திற்கு வருவதற்கான அனுமதி.

நாம் எடுக்க வேண்டிய முடிவு என்ன?

நாம் மிகவும் தெளிவான முடிவை எடுத்தோம். அந்த நேரத்தில் போர் அறிகுறிகள் தென்படத் தொடங்கியிருந்தன.

எமது நாட்டின் நடுநிலைமையைக் கருத்திற்கொண்டு, நாங்கள் அந்த இரண்டு தரப்பினருக்குமே அனுமதி வழங்கவில்லை.

அதுதான் நடுநிலைமை.

ஈரானிய கப்பல்களுக்கு ஏன் அனுமதி வழங்கவில்லை என்று சிலர் கேட்டதாக எனக்கு நினைவிருக்கிறது.

ஒருவேளை அனுமதி வழங்கியிருந்தால் என்ன நடந்திருக்கும்?

எமது ஒட்டுமொத்த நடுநிலைமையும் சீர்குலைந்திருக்கும்.

நாம் ஒரு தரப்பிற்கு சார்பாகச் செயற்படுவதாகக் கருதப்படும் அல்லது மற்றைய தரப்பிற்கும் அனுமதி வழங்க வேண்டிய நிலை ஏற்படும்.

அவ்வாறு நடந்திருந்தால், எங்கோ தொலைதூரப் பிராந்தியத்தில் நிலவும் போர் மோதல்கள் மத்தள விமான நிலையத்திற்கும் கொழும்பு துறைமுகத்திற்கும் அருகாமையில் வந்திருக்கும்.

நாம் அதனைச் செய்யவில்லை என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## ஈரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டுள்ளது.

ஈரான் தூதரகத்தில் உள்ள இராணுவ மற்றும் பாதுகாப்புத் தூதர்களையும் அவர்களது ஊழியர்களையும் ”விரும்பத்தகாத நபர்கள்” என அறிவித்து, 24 மணி நேரத்திற்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டதாக கத்தார் வெளியுறவு அமைச்சகம் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சகத்தின் இயக்குநர் இப்ராஹிம் யூசிஃப் ஃபக்ரோ மற்றும் ஈரானிய இஸ்லாமியக் குடியரசின் அரசிற்கான தூதர் அலி சலேஹாபாதி ஆகியோருக்கு இடையே நடைபெற்ற சந்திப்பின் போது இந்த பணிப்புரை அறிவிக்கப்பட்டது.

ஈரான் இந்தப் பிராந்தியத்தைப் பாரிய அழிவை நோக்கித் தள்ளுவதாகக் குற்றம் சாட்டியுள்ள கட்டார் வெளிவிவகார அமைச்சு, இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஈரானியத் தரப்பின் இந்த விரோதமான அணுகுமுறை தொடர்ந்தால், கட்டார் தனது இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் தேசிய நலன்களைப் பாதுகாப்பதை உறுதிசெய்யும் வகையில் கூடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அமைச்சகம் வலியுறுத்தியது.






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2026 MARCH 20 - FRIDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வாருங்கள்

ஈரான் மீது தொடுக்கப்பட்டுள்ள யுத்தம் உலகளாவிய ஆதரவை இழந்துள்ள நிலையில் தற்போது யுத்தநிறுத்தம் குறித்த பேச்சுக்களும் கேட்கத் தொடங்கியுள்ளன.

பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய தாக்கமும் அதிகரிக்கும் உயிரி ழப்புகளும் எதற்கும் யுத்தம் தீர்வு அல்ல சமாதானமே சிறந்த வழிமுறை என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறது.

ஈரான் மீதான யுத்தத்தில் ஐக்கிய நாடுகள் சபை போன்றன மூச்சற்றுக் கிடக்கும் நிலையில் யார் யாருக்கு யுத்தத்தை நிறுத்தச் சொல்வது என்ற தெளிவற்ற நிலையும் இப்போது உருவாகியுள்ளது. வத்திக்கான் பாப்பரசர் யுத்த நிறுத்தம் வேண்டுமென்று விடுத்த கோரிக்கையும் யாரினாலும் இதுவரை கண்டு கொள்ளப்படவில்லை.

ஈரானைத் தாண்டியும் ஈரான் மீது தொடுக்கப்பட்டுள்ள கடும் விளைவுகளை ஏற்படுத்தியதன் விளைவை தற்போது இலங்கைப்போன்றநாடுகள்அனுபவிக்கத் தொடங்கியுள்ளன.

ஏற்கனவே இலங்கையைத் தாக்கிய இயற்கைப் பேரிடர் நாட்டை துன்பப்படுத்தி மக்களையும் பெரிதும் பாதித்திருந்தது.

தற்போது யுத்தம் ஏற்படுத்தப் போகும் பொருளாதாரப் பாதிப்பு மீண்டும் பாதகங்களையே அள்ளித்தரப் போகிறது.

உள்நாட்டு யுத்தத்தை எதிர்கொண்ட நாடு என்ற வகையிலும் அதனால் ஏற்பட்ட காயங்களை எதிர்கொண்ட நாடு என்ற வகையிலும் ஈரானுக்கு எதிராக யுத்தம் வேண்டாம் என்றுகூற இலங்கைக்கு உரிமையுள்ளது. ஆம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வாருங்கள் என்பதே நாம் விடுக்கும் கோரிக்கையாகும்.

## பயங்கர...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஆச்சரியத்தை தந்திருக்கிறது.

பல நாட்கள் ஒடுக்கி வைக்கப்பட்டதாக கருதப்பட்ட ஹிஸ்புல்லாக்கள் இவ்வளவு பலமாக எவ்வாறு வெளிப்படுகிறார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்வதற்கு மிகவும் சிரமமாக காணப்படுகிறது.

இந்த யுத்தத்தை முடிப்பதற்காக துருக்கி உட்பட பல நாடுகள் பல்வேறு வகையான இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டாலும் சகல இராஜதந்திர முயற்சிகளும் தோல்வி அடைந்துள்ள நிலையில், ஒரு அணு ஆயுத யுத்தமாக இது செல்லக்கூடும் என்ற அடிப்படையில் உலக சுகாதார ஸ்தாபனம் ஆரம்ப நடவடிக்கைகளாக அணு ஆயுத போராக இது மாறினால் என்னவாக நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்ற தொடர்பான கலந்துரையாடலகள் மற்றும் முன்னேற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் போர் உலகளாவிய கப்பல் போக்குவரத்து நெருக்கடியை மிகவும் சிக்கலான நிலைமைக்கு மாற்றி இருப்பதால் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி அதேபோன்று இந்த போரின் பின்புலமாக உருவாகிக் கொள்ள பொருளாதார நெருக்கடி உலகில் பொருளாதார அவசர நிலையை (புடழடியட நுஉழழெஅiஉ நுஅநசபநெஉல) உருவாக்க முடியும் என்று பொருளியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்த விடயம் தொடர்பாக உலகில் உள்ள சகல அரசுகளும் பல்வேறு வகையான முன் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

அதேவேளை ஹவுதிகள் செங்கடல் பகுதியையும் கப்பல் போக்குவரத்துக்கு மூடுவதாக எச்சரித்துள்ளதோடு அவர்களும் உலகளாவிய முஸ்லிம் உம்மத்துக்காக போரில் இணைய இருப்பதாக அறிவித்துள்ளனர். அவ்வாறான சூழ்நிலை உருவாகின்ற போது இந்த யுத்த மிகப் பயங்கரமான ஒரு காலகட்டத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக ஹவுதிகள் இந்த யுத்தத்தில் இணையுமாக இருந்தால் சவுதி போன்ற நாடுகள் இருமுனை தாக்குதலுக்குள்ளாக வாய்ப்பிருக்கின்றது. அவ்வாறு இருமுனைத் தாக்குதல்களுக்கு உள்ளாகின்ற போது சவுதி நிர்ப்பந்தமாக இந்த போரில் சம்பந்தப்பட வேண்டிய நிலைமை உருவாகும். இவ்வாறு சவுதி நிர்ப்பந்தமாக இந்த போரில் சம்பந்தப்படுமாக இருந்தால் அது சவுதி அரேபியா ஊடாக ஸ்தீர தன்மையை இழப்பதோடு மிகச்சிக்கலான ஒரு பூலோக அரசியல் சமன்பாட்டை உருவாக்கும். எனவே மிகவும் ஆபத்தான நிலைமையை அடைந்துள்ள இந்த யுத்தம் இன்னும் தொடருமாக இருந்தால் அது உலகளாவிய ஒரு நெருக்கடியாக மாறுவதற்குரிய வாய்ப்பு காணப்படுகிறது.

இதேவேளை பல ஆயிரக்கணக்கான யூதர்கள் இஸ்ரேலை விட்டு வெளியேற ஆரம்பிக்கின்றனர். தரைவழி மார்க்கமாகவும் கூடுதலாக வெளியேற ஆரம்பித்துள்ளனர். வரலாற்றில் முதல் தடவையாக இஸ்ரேலியர்கள் அகதிகளாக பல இடங்களில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர். இஸ்ரேலியர்களின் இந்த வெளியேற்றம் இஸ்ரேலிய அரசாங்கத்திற்கு மிகப்பெரிய சங்கடத்தை உருவாக்கியுள்ளது.



# எஸ்.எம்.மரிக்கார் ஏற்பாட்டில் கொலன்னாவையில் இப்தார் நிகழ்வு



கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ் எம் மரிக்கார் கொலன்னாவ பிரதேச உலமாக்கள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், கதீப்மார்கள் முஅத்தின்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக ஏற்பாடு செய்த நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு நேற்று (18) கொலன்னாவ புல்மன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட பல அரசியல் பிரமுகர்களும் இதில் பங்கேற்றனர்.

## நேத்ரா தொலைக்காட்சியில் ரஷீத் எம். றியாழின் பெருநாள் கவிதைப் பொழிவு

இலங்கை ரூபவாஹினி கூட்டுத் தாபன நேத்ரா அலை வரிசையில் நோன்புப் பெருநாள் தினத்தன்று பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை இடம்பெறவுள்ள விசேட பெருநாள் நிகழ்ச்சியில் கவிஞர் ரஷீத் எம் றியாழின் "வான் கிழித்து வந்த பிறை" எனும் தலைப்பிலான விசேட கவிதைப் பொழிவு இடம்பெறவுள்ளது.

வானொலி தொலைக்காட்சிக் கலைஞர் முபாரக் மொஹிதீன் இந்நிகழ்ச்சியை தயாரித்தளித்துள்ளார். பத்திரிகையாளரும் கவிஞருமான ரஷீத் எம். றியாழ் தினகரன் வாரமஞ்சரியின் முன்னாள் "கவிதை பூங்கா" எனும் கவிதைப் பகுதியின் சுமார் 11 ஆண்டுகளாக பொறுப் பாசிரியராகவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மலையக சேவையில் "வசந்த வாசல்" எனும் கவிதா நிகழ்ச்சியை சுமார் ஐந்து ஆண்டுகள் தயாரித்தளித்த வருமாவார்.



## சகவாழ்வு சௌபாக்கியம் மோலோங்க பிரார்த்திப்போம்

**பேருவளை பிரதேச சபைத் தலைவர்**



**(பீ.எம். முக்தார் - பேருவளை)**

அல்லாஹ்வின் ஆணையை ஏற்று, புனித நோன்பை நோற்று முடித்த களிப்பில் கொண்டாடும் ஈதுல் பித்ர் பெருநாள் தினத்தில் எமது மக்களுக்கு எனது உளம் கனிந்த வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன் என்று பேருவளை பிரதேச சபைத் தவிசாளர் பைஸான் நைஸரின் பெருநாள் வாழ்ந்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது, இன்று நாடு ஒரு புறத்தில் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. மறுபுறத்தில், முஸ்லிம், அரபு நாடுகளில் யுத்த கொந்தளிப்பால் உலகம் மற்றொரு நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் எமது சமூகத்தினர் பெரும் தியாகத்தோடு நோன்பை நோற்று இன்று பெருநாளைக்கு கொண்டாடுகிறார்கள். இவ்வேளையில் உள்நாட்டிலும் வெளி உலகிலும் இஸ்லாத்தின் உயர் பண்பான சாந்தியும் சமாதானமும் நிலவும் நோன்பின் மூலம் மக்கள் பெற்ற ஆத்மீகப் பயிற்சிகள் யாவும் மக்கள் மனங்களில் நிலை பெற்று, சகவாழ்வு, சௌபாக்கியம் மேலோங்கவும் அல்லாஹ் அருள்பாளிப்பானாக " என்று பிராத்திக்கிறேன். அனைவருக்கும் ஈத் முபாரக்

## நாட்டின் உண்மையான நெருக்கடியை அரசுக்கு விளக்கிய சஜித் பிரேமதாச

நாட்டில் நெருக்கடி இல்லை என்று கூறும் அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உண்மையான நெருக்கடியை எடுத்துக் காட்டினார்.

நாட்டில் நெருக்கடி இல்லை என்றும், முதலீட்டிற்கு சாதகமான சூழலை உருவாக்க தொடர்ச்சியான மின்சாரம் வழங்கப்படுகிறது என்றும் கூறப்பட்டாலும், தற்போது நுரச்சோலை மின்நிலையத்தை மையமாகக் கொண்டு கடுமையான தேசிய நெருக்கடி ஒன்று நிலவிவருகின்றது. 12 ஆம் திகதி 51 மெகாவோட், 13 ஆம் திகதி 130 மெகாவோட், 14 ஆம் திகதி 135 மெகாவோட், 15 ஆம் திகதி 132 மெகாவோட், 16 ஆம் திகதி 148 மெகாவோட், மற்றும் நேற்று 176 மெகாவோட் என்ற அளவில் மின் உற்பத்தி குறைந்து காணப்படுகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நிலக்கரி பயன்பாட்டில் ஏற்பட்ட சிக்கல் யுத்தத்தால் ஏற்பட்டதல்ல என்றும், தற்போது பறக்கும் சாம்பல் மற்றும் படிந்த சாம்பல் அதிகளவில் உற்பத்தியாவதால் சாம்பலை முகாமைத்துவம் செய்யும் உபகரணங்களில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதனால் மின் உற்பத்தி குறைந்து சாம்பல் அளவு அதிகரித்துள்ளன. இதன் மூலம் நிலவும் நெருக்கடி தெளிவாகிறது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

புத்தாண்டு காலத்தில் சீமெந்து நிறுவனங்கள் மூடப்படுவதால் இந்த சாம்பலை அகற்றுவதில் பிரச்சினை காணப்படுகின்றன. இதனால் சாம்பலை சாம்பல் மேட்டிற்கு அனுப்ப வேண்டி காணப்படுகின்றன. இதனால் கடுமையான சுற்றுச்சூழல் பேரிடர் கூட உருவாகலாம். அது உடல்நலத்தை பாதிப்புக்கும் காரணமாகவும் அமையலாம்.

முதியோர், குழந்தைகள், கர்ப்பிணி தாய்மார்கள், சுவாச நோயாளிகள் ஆகியோருக்கும் இதனால் பாதிப்பு ஏற்படும். இது விவசாயத்தின் உற்பத்தித் திறனையும் பாதிக்கும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று (19) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்ச்சியான மின் விநியோகத்தையும் பாதிக்கும். மத்திய கிழக்கு யுத்தத்தால் இது மேலும் அதிகரிக்கலாம். இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் பிரகாரம், ஏப்ரல், ஜூன், ஜூலை மாதங்களில் மின்நிலைய பராமரிப்பு காரணமாக மின் வெட்டு கூட ஏற்படலாம். தற்போது உருவாகியுள்ள நெருக்கடிக்கு மத்தியில் கடுமையான பல பிரச்சினைகள் எழுந்து காணப்படுகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

விவசாயிகள், மீனவர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர், மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட பல துறைகளில் பெரும் பிரச்சினைகள் உருவாகியுள்ளன. ஞசு முறை இன்னும் சரியாக முன்னெடுக்கப்படவில்லை. தொழிற்சாலைகளில் தேவையான



அளவை விட எண்ணெய் பயன்பாட்டின் அளவு குறைக்கப்பட்டுள்ளன. தரம் குறைந்த நிலக்கரியால் தேவையான மின் உற்பத்தி செய்ய முடியாத நிலை காணப்படுவதனால், மக்களுக்கு கிடைக்க வேண்டிய டீசலை பயன் படுத்தி மின் உற்பத்தி மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

நிலக்கரி நெருக்கடியால் உருவாகும் அதிக செலவீனத்தை அதிக மின்சார கட்டணம் மூலம் மக்கள் மீது சுமத்த அரசாங்கம் தயாராகி வருகின்றது. இந்த நிலையில் நாட்டு மக்களுக்கு என்ன நேரும் என்பதை ஊகிக்கவே முடியாது. அரசாங்கம் இவர்களுக்கு என்ன பதில் அளிக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம். திறைசேரியில் மேலதிகமாக காணப்படும், நிரம்பி வழியும் பணத்தில் மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுங்கள். உலகின் பிற நாடுகள் அவ்வாறு செய்தாலும் நமது நாட்டில் இன்னும் அது நடக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

## முழு நிலவாக நமது வாழ்வு ஒளிரட்டும்

**எம்.எஸ். உதுமாலெப்பை ( பா.உ)**



இஸ்லாம் என்பது மதம் அல்ல அது ஒரு மார்க்கம். அது வாழ்க்கைக்கான வழிகாட்டி. தியாகங்களாலும் அர்ப்பணிப்புகளாலும் வளர்க்கப்பட்டது. மனித இனமும் ஜின்களும் இறைவனை வணங்குவதற்காகவே அன்றி படைக்கவில்லை என்கிறது புனித அல்குர்ஆன். அதன் அடிப்படையில் புனித ரமழான் மாதம் என்பது மாதங்களில் மட்டுமல்ல மனித உள்ளங்களிலும் புனிதத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இறைவனால் உருவாக்கப்பட்டது.

ரமழான் மாதத்தில் உள்ள புனிதம் என்பது மனங்களிலும் வாழ்வினிலும் பின்பற்றப்படும் போது தான் அது இம்மையிலும் மறுமையிலும் நமக்கு ஒளியாக அமைகிறது. அதனை முஸ்லிம்களாகிய நாம் மிகக் கவனமாகவும் கரிசனையோடும் செயற்படுத்த வேண்டும். சுமார் ஒரு மாத காலம் நோன்பிருந்து நாள் முழுவதும் இபாதத் என்கின்ற வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு இறைவனின் திருப்தியை மட்டுமே நோக்காக கொண்டு பலனை அடைந்து கொள்ளக்கூடிய உன்னத மாதம்.

ஏழைகளின் பசியை வசதி படைத்தவர்களும் உணர வேண்டும் என்ற இஸ்லாத்தின் உன்னத நோக்கத்தின் அடிப்படையிலேயே இந்த புனித மாதத்தில் அனைத்து செயற்பாடுகளும் அமைந்து விடுகிறது அல்ஹம்துலில்லாஹ். கண்ணியம், ஒழுக்கம், கட்டுப்பாடு, இறை திருப்பி போன்ற உன்னத செயற்பாடுகளை இந்த மாதம் முழுக்க வளர்த்துக் கொள்கின்ற நாம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் அவற்றை கடைப்பிடித்து ஒழுக வேண்டியது நமது தலையாய கடமையாகிறது. இறைவனின் அருளால் நாம் திருப்திபட்ட நிலையில் இந்த ரமழான் மாதத்தை கடந்து வருகின்ற நிலையில் நமது உடன்பிறப்புகள் காசாவிலும் ஈரானிலும் அல்லாஹ் எழுதியபடியான வெற்றிக்குரிய நாள் வரும்வரை எதிரிகளின் துரோகத்தால் வஞ்சிக்கப்பட்டு சொல்லொணா துயரங்களையும் இன்னல்களையும் அனுபவித்து வலிகொண்ட பெருநாளை எதிர் கொள்கின்றனர்.

இன்றைய நாட்களில் அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற சர்வாதிகார வல்லரசுகளின் மிலேச்சத்தனமான தாக்குதல்களுக்கு நமது சமூகம் பலியாகிறது. சென்ற ரமழான் மாதம் முழுவதும் நமது பலஸ்தீன் மக்கள் அனுபவித்து வந்த இன்னல்களுக்குரிய கூலியை இறைவன் நிச்சயம் வழங்க நாம் எல்லோரும் இப்புனித நாட்களில் அவர்களை நமது பிரார்த்தனைகளில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

எல்லாம் வல்ல இறைவன் நமது நேரான எண்ணங்களையும் நல்லமல்களையும் பொருந்திக் கொள்ள இறைவனை பிரார்த்திப்பதோடு அனைவருக்கும் சுகமான ஈத்துல் ஃபித்துர் நோன்பு பெருநாள் நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறேன்.

## உலகில் அமைதி சமாதானம் ஏற்பட இருகரமேந்துவோம்

**பேருவளை நகர சபை எதிர்க்கட்சித்தலைவர்**

**(பீ.எம். முக்தார் - பேருவளை)**



தொடர்ச்சியாக ஒரு மாத காலம் பகல் பொழுதில் பசி, தாகத்துடன் புலன் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி நோன்பு நோற்று, இரவில் நீண்ட நேரம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு, இறையச்சத்துடன் ஆத்மீகத்தின் உயர் நிலையை அடைந்த திருப்தியுடன் ஈதுல் பித்ர் பெருநாளைக் கொண்டாடும் எமது சமூகத்தினர்களுக்கு வாழ்த்துக்களைக் தெரிவித்துக்கொள்கிறேன். " என்று பேருவளையின் நகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அஸாம் பளீல், தனது பெருநாள் வாழ்த்துரையில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில், முஸ்லீம்கள் இந்த வருடம் புனித நோன்பு நோற்ற வேளையிலேயே அமெரிக்க - இஸ்ரேல் கூட்டுச் சேர்க்கையால் ஈரானில் யுத்தம் திணிக்கப்பட்டு உலகமே ஆடிப் போய் இருக்கிறது. இந்த நெருக்கடி நிலையில் பொறுமை காத்து இறையச்சத்தோடு நோன்பு நோற்று பூர்த்தி செய்திருப்பது முஸ்லிம்களின் ஆத்மீக உயர் பண்பை பறைசாற்றுவதாகவுள்ளது. அல்லாஹ் அல்குர்ஆனிலும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அருள்வாக்கிலும் வாக்களித்த பிரதிபலன்கள் கிடைக்கவும் உலகில் அமைதியும் சமாதானமும் நிலவவும் இந்த புனித ஈகைத் திருநாளில் அல்லாஹ்விடமே இருகரமேந்தி துஆச் செய்கிறேன். ஈத் .

# ரமழானின் பின்னர் நோன்பின் படிப்பினைகள் வாழ்வில் பதியட்டும் !

**கஹட்டோவிட்ட ஷிபா**

"நோன்பு என்பது வயிற்றைக் கட்டிப்போடுவது மட்டுமல்ல அது நம் மனசாட்சியைத் தட்டி எழுப்புவது. ரமழானில் நாம் அடைந்த 'தக்வா' (இறையச்சம்), பெருநாளுக்குப் பின்பும் நம் வாழ்வில் தொடர்கிறதா? என்பதே உண்மையான வெற்றி."

வாழ்க்கையில் வந்துசெல்லும் பல ரமழான்களில் ஒரு சாதாரண ரமழானாக இவ்வருட ரமழானும் அமைந்துவிடக்கூடாது. ரமழான் தர விரும்பும் பண்பாட்டு மாற்றத்தை ஒவ்வொருவரும் இம்முறையாவது வாழ்க்கையில் ஏற்று சான்றுபகர முன்வரவேண்டும்.

"ஈமான் கொண்டவர்களே! நீங்கள் இறையச்சம் உடையவர்களாவதற்காக, உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போல, உங்கள் மீதும் அது கடமையாக்கப்பட்டுள்ளது." (அல்குர்ஆன் 2:183)

இந்த இறைவசனம் நோன்பின் அடிப்படை நோக்கத்தை 'தக்வா' (இறையச்சம்) என்று சுருக்கமாக வரையறுக்கிறது. ஒரு மாதம் முழுவதும் பசித்திருந்த நோன்பாளி, பெருநாள் தினத்தில் நுழையும் போது அவர் அடைந்திருக்க வேண்டிய மாற்றங்கள் எவை என்பதைச் சிந்திப்பது அவசியமாகும்.

**1. தக்வா: வாழ்வின் திசைமானி**

நோன்பின் மிகமுக்கிய பாடம் தக்வா ஆகும். தனிமையில் இருக்கும்போது கூட, தாகம் நாவைக் காய்ந்தாலும், எவரும் பார்க்காத இடத்திலும் ஒரு துளி நீரைக் கூட நோன்பாளி அருந்துவதில்லை. இதற்குக் காரணம் 'அல்லாஹ் என்னைப் பார்க்கிறான்' என்ற ஆழ்ந்த நம்பிக்கை. இந்த உணர்வை ரமழானுக்குப் பின்னரும் வாழ்வின் அனைத்துக் கட்டங்களிலும் (தனிப்பட்ட, குடும்ப, சமூக) கொண்டு வருவதே நோன்பின் உண்மையான வெற்றியாகும்.

**2. பொறுமை மற்றும் மனக் கட்டுப்பாடு**

நோன்பு என்பது ஒரு தற்காப்புக் கவசமாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

"நோன்பு ஒரு கவசமாகும். எனவே நோன்பாளி தீய பேச்சுகளைப் பேச வேண்டாம் அறியாமையான காரியங்களில் ஈடுபட வேண்டாம். எவரேனும் அவருடன் சண்டையிட்டால் அல்லது ஏசினால் 'நான் நோன்பாளி' என்று இருமுறை கூறட்டும்." (ஆதாரம்: புகாரி)

தன்னைக் கோபமூட்டும் சூழலிலும் நிதானத்தைக் கடைப்பிடிக்க நோன்பு கற்றுத்தருகிறது. உணவை விடவும் நாவையும் எண்ணத்தையும் கட்டுப்படுத்துவதே பெரும் பயிற்சியாகும்.

**3. ஏழைகளின் பசியை உணர்தல்**

பசி என்பது ஏழைகளுக்கு நிரந்தரம், நோன்பாளிக்கு அது தற்காலிகம். பசியின் வலியை நேரடியாக அனுபவிக்கும் போதுதான், சமூகத்தில் வறுமையில் வாடுபவர்களின் மீதான இரக்கம் பிறக்கிறது. இதனாலேயே ரமழான் மாதத்தில் தர்மங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

நபி (ஸல்) அவர்கள் மனிதர்களிலேயே மிக அதிகத் தர்மம் செய்பவர்களாக இருந்தார்கள். ரமழான் மாதத்தில் ஜிப்ரீல் (அலை) அவர்களைச் சந்திக்கும் காலங்களில் வீசும் காற்றை விட வேகமாக தர்மம் செய்பவர்களாக இருந்தார்கள் என இப்னு அப்பாஸ் (ரழி) அறிவிக்கிறார்கள். (புகாரி).



**4. அல்குர்ஆனுடனானத் தொடர்பு**

ரமழான் என்பது அல்குர்ஆன் அருளப்பட்ட மாதமாகும். "நிச்சயமாக நாம் இதனை (குர்ஆனை) கண்ணியமிக்க இரவில் இறக்கினோம்" (அல்குர்ஆன் 97:1). ,ரவு நேரத் தொழுகைகள் (தராவீஹ்) மூலம் குர்ஆனைச் செவிமடுப்பதும் ஓதுவதும் மனதிற்கு அமைதியைத் தருகிறது. ,ந்தப் பழக்கம் வருடத்தின் ஏனைய மாதங்களிலும் தொடர வேண்டும் என்பதே நோன்பின் எதிர்பார்ப்பு.

**5. நேர முகாமைத்துவம் (Time Management)**

சரியான நேரத்தில் ஸஹர் செய்வது, சூரியன் மறைந்தவுடன் இப்தார் செய்வது என நேரத்தை மிகத் துல்லியமாகக் கடைப்பிடிக்க நோன்பு பழக்குகிறது. வீணான அரட்டைகளைத் தவிர்த்து, நேரத்தை வழிபாடுகளில் செலவிடும் ,ந்தப் பண்பு, ஒரு முஸ்லிமின் லௌகீக வாழ்வின் வெற்றிக்கும் அடிப்படையாகும்.

**6. பெருநாள்: வெற்றியின் அடையாளம்**

நோன்புப் பெருநாள் என்பது வெறும் களிப்பாட்டம் அல்ல. மாறாக, அது அல்லாஹ்வின் அருளுக்காக நன்றி செலுத்தும் தினமாகும்.

"நீங்கள் அந்த எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் பெருமையை நீங்கள் போற்றிப் புகழவும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் (நோன்பு கடமையாக்கப்பட்டது)." (அல்குர்ஆன் 2:185)

பெருநாள் தொழுகைக்குச் செல்வதற்கு முன்னதாகவே 'ஸதக்கத்துல் பித்ர்' எனும் தர்மத்தை வழங்குவது கடமையாக்கப்பட்டுள்ளது. இது வறியவர்களும் பெருநாள் மகிழ்ச்சியில் பங்கெடுக்க வேண்டும் என்பதையும், நோன்பின் போது ஏற்பட்ட சிறு பிழைகளுக்குப் பரிகாரமாகவும் அமைகிறது.

எனவே, நோன்பு என்பது ஒரு வருடாந்த 'ரீசார்ஜ்' (Recharge) போன்றது. ரமழானில் நாம் பெற்ற பயிற்சிகள் எஞ்சிய பதினொரு மாதங்களிலும் நம்மிடம் பிரதிபலிக்க வேண்டும். பொய், புறம் பேசுதல், வட்டி, ஏமாற்றுதல் போன்ற தீமைகளிலிருந்து விலகி, இறையச்சத்துடன் வாழ்வதே நோன்பின் சாராம்சமாகும்.

எந்த ஒரு நோன்பாளி ரமழானுக்குப் பிறகும் நற்பண்புகளில் முன்னேற்றம் காண்கிறாரோ, அவரே உண்மையான நோன்பாளி. அத்தகைய மாற்றத்தை நம் அனைவருக்கும் அல்லாஹ் வழங்குவானாக!

---

## மீண்டும் மலர்ந்திடச்செய் ரஹ்மானே!

ஆண்டுக்கு ஒருமுறை
பூக்கின்றன பூவல்லவா
அகிலத்தாரை காக்கின்ற
சிறப்புமிகு தீனல்லவா

வாழ்க்கைக்கும் வழிகாட்டும்
அற்புத மாதமல்லவா
"லைலத்துல் கத்ரிலே"
திருமறையின் உதிப்பல்லவா
அல் குர்ஆனின்
ஒலிகள் ஒளிரும் ரமழானல்லவா



ஈமான் நிறைந்திட
உள்ளம் மலர்ந்திட
அருளும் பெருகிட
பரக்கத் பொழிந்திட
பசியை உணர்த்திட
பாவம் கழிந்திட
நன்மைகள் அடைந்திட
நிம்மதி பெருகிட

இல்லம் மகிழ்ந்திட
உள்ளம் ஒளிர்ந்திட
தீமையை அழித்திட
நன்மைகளை பெருக்கிட
வந்தாயே ரமழானே
பிரியும் தருவாயிலே

கண்கள் நனையுதே
உள்ளம் வருந்துதே...
ஏக்கங்கள் தீராது
தாக்கியது இதயத்தையே
மீண்டும் மலர்ந்திடச்
செய்திடு ரஹ்மானே!

ஏ. சீ. பாத்திமா ரம்லா,
கொழும்பு.

---

## பிரிந்து போகும் ரமழானே மீண்டும் வருவாய்...!

பிரிந்து போகும் ரமழானே!
பரிசுத்தத்தின் இனிய நினைவே!
நெஞ்சை நனைத்த
நூரின் காலமே!
நீ சென்றாலும் தடம் விடுவாயே!

விடியற்கால ஸஹர் நிமிடங்கள்
விழித்த கண்களின் துஆ தருணங்கள்
அல்லாஹ்வை நினைக்கும்
அமைதி ஆன்மாவை
அலங்கரித்த ஒளிகள்



பசியின் வழியே
பொறுமை கற்றோம்
தாகத்தின் வழியே
நன்றி உணர்ந்தோம்
இறை கருணையின்
அர்த்தம் அறிந்தோம்
இதயம் புதிதாய்
பிறந்தது போலும்


தராவீஹ் இரவின் நிசப்தங்களில்
தாழ்ந்த நெஞ்சின் வேண்டுதல்களில்
கண்ணீர் கலந்து
சொன்ன துஆவில்
கருணைக் கதவுகள் திறந்தனவே

ஏழையின் வலியை
உணர்ந்த மாதம்
ஈகையின் வழியை கற்ற மாதம்
உள்ளம் மென்மையாய்
மாறிய நேரம்
உயிர் இறைவனுக்கு
அருகான காலம்

பிரிந்து போகும் ரமழானே!
மீண்டும் வருவாய் என்ற நம்பிக்கையே
நீ தந்த ஒளி நெஞ்சில் நிலைக்க
நாம் வாழ்வோம் இறை வழியிலே!

மௌலவி -ஐ. ஏ. காதிர் கான்,
மினுவாங்கொடை.

---




ரமழான் வந்ததால் ரஹ்மத் மழை பொழிந்தது /
ரம்மியமான ஒளியில்
உள்ளங்கள் விழித்தது ஃ
நோன்பின் நேர்மை நெஞ்சங்களை நிமிர்த்தியது /
நன்மையின் நறுமணம் நாடெங்கும் நிறைந்தது /
துஆவின் துளியில் துன்பமும் துயரம் கரைந்தது /
தக்வாவின் தீபம் திகழ்ந்து விளைந்தது /
குர்ஆன் குரலில் கருணை பொங்கியது /
கண்ணீர்த் துளியில் பாவங்கள் கரைந்தது /
சகாத்தின் சிந்தை சமூகத்தைச் சேர்த்தது /
ஆம் நாம் நோற்ற இந்த புனித ரமழான் நோன்பு /
எம்மை விட்டும்
விடைபெற்றுச் செல்கிறது /
அடுத்த ஆண்டும்
மீண்டும் வா
புனித ரமழானே /
உன்னை கவலையுடன்
வழி அனுப்புகிறோம் ரமழானே /

ஏ. எம். உம்மு ஹானி புஷ்ரா,
பள்ளப்பட்டி,

## இன ஐக்கியம் மோலோங்கி எங்கும் மகிழ்ச்சி பொங்கட்டும்

### பேருவளை நகர சபைத் தலைவர்



(பீ.எம். முக்தார் – பேருவளை)

ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று, ஷவ்வால் தலைப் பிறையுடன் ஈதுல் பித்ர் எனும் ஈகைப் பெருநாளைக் கொண்டாடி மகிழும் எமது நல்லுள்ளங்களுக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்" என்று பேருவளை நகர சபைத் தவிசாளர் மபாஸிம் அஸாஹிர் தனது பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, மக்கள் விருப்பத்திற்கமைய ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு ஆண்டுகளை எட்டிப் பிடித்திருக்கும் இவ்வேளையில் நாடு படிப்படியாக முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பது மக்கள் பெற்றுள்ள மற்றுமொரு வெற்றியாகும். அத்துடன் முஸ்லிம்கள் மிகவும் அமைதியாகவும் மனத்திருப்தியுடனும் நோன்பை நோற்று, இன்று ஈகைப் பெருநாளை குதூகலமாகக் கொண்டாடுகிறார்கள். தொடர்ந்தும் நாட்டில் இனக்குரோதங்கள் ஒழிந்து, இன ஐக்கியம் மேலோங்கி, நாடு பொருளாதார விருத்தி பெற்று மகிழ்ச்சி பொங்கட்டும் என்று இந் நன்நாளில் எல்லாம் வல்ல அல்லாஹ்வை பிரார்த்திக்கிறேன்." என்று அவர் வாழ்த்துச் செய்திகள் மேலும் தெரிவித்துள்ளார்.

ஈத் முபாரக்!

## சாந்தியும் சமாதானமும் நிலவப் பிரார்த்திப்போம்

### இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

(பீ.எம். முக்தார் – பேருவளை)



ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்றும் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டும் தொடர்ச்சியான ஆத்மீகப் பயிற்சிகளை பெற்றுக் கொண்டோம். இதன் மூலம் நாம் புனிதர்களாகியுள்ளோம். அல்லாஹ்வின் இத்தகைய எதிர்பார்ப்பு பூரண வெற்றிக் கம்பத்தைத் தொடுவதற்கு இனிவரும் நாட்களில் எமது சகல செயற்பாடுகளும் இறையச்சத்துடன் கூடியதாக அமைய வேண்டும். இந்த நிலை, நிலைபெற அல்லாஹ் அருள் புரிவானாக!" என்று முன்னாள் அமைச்சர், இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் விடுத்துள்ள பெருநாள் வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார். அதில் அவர் தொடர்ந்து கூறியதாவது, எமது நாட்டு முஸ்லிம்கள் ரமழான் காலங்களில் சவால்கள், சோதனைகளை எதிர்கொண்ட வரலாறுகள் உண்டு. இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் ரமழான் 17 ஆம் நாள் பத்ர் யுத்தத்தை எதிர்கொண்டு அதில் வெற்றி பெற்ற வரலாற்றைக் கண்டோம். இந்த வருடமும் வளைகுடாவில் யுத்த சூழ்நிலையால் உலகளவில் பெரும் பதற்றம் நிலவிய சூழ்நிலையில் நோன்பை நோற்று, இன்று ஈதுல் பித்ர் பெருநாள் தினத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். இந்நிலையில் உலகெங்கும் இஸ்லாத்தின் உயர் இரட்சியமான சாந்தியும் சமாதானமும் நிலவ வேண்டும் என்பதையே முதன்மையான பிரார்த்தனையாகவும் பெருநாள் செய்தியாகவும் கொள்ள வேண்டும். அத்துடன் ஒரு மாத காலம் நோன்பிருந்து, பெற்ற துஆ ஆத்மீக பயிற்சிகள் உலகெங்கும் வியாபித்தோங்க அல்லா அருள் புரிய பிராத்திக்கிறேன். எமது மக்கள் அனைவருக்கும்

ஈத் முபாரக்!

## மத்திய கிழக்கில் மூண்டுள்ள யுத்தம் முடிவுக்கு வந்து நிரந்தர சமாதானம் நிலவுவதற்கு அல்லாஹ்வை பிரார்த்திப்போம்

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்



மத்திய கிழக்கில் மூண்டுள்ள யுத்தம் முடிவுக்கு வந்து நிரந்தர சமாதானம் நிலவுவதற்கு "ஈதுல் பித்ர்" பெருநாள் தினத்தில் அல்லாஹ்வை பிரார்த்திப்போம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள "ஈதுல் பித்ர்"வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் ,அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, புனித ரமழான் மாதம் ஆன்மீகப் புத்தெழுச்சி , தியாக மனப்பான்மை ஆகியவற்றுடன் எல்லாம் வல்ல அல்லாஹ்வுடன் நெருக்கமான தொடர்பை பேணக்கூடிய சிறந்த கால கட்டமாக இருந்தது. ஆயினும், இந்த ஆண்டு, உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்களை மிகவும் துயரமான காலத்தில் இந்த புனித மாதம் கடந்து செல்கிறது. ஏனெனில், முஸ்லிம்கள் வாழும் பல்வேறு நாடுகளில், குறிப்பாக மேற்கு ஆசியாவில் ஈவிரக்கமற்ற யுத்த கெடுபிடிகள் அதிகரித்தவண்ணம் உள்ளன. எனவே, இம்முறை நாம் கனத்த இதயங்களுடன் இந்த பெருநாளைச் சந்திக்கிறோம்.

தியாகம் மற்றும் விடாமுயற்சியின் தாற்பரியத்தை ரமழான் மீண்டுமொரு முறை நமக்கு நினைவூட்டியிருக்கிறது. நம் படைப்பாளனான அல்லாஹ்வை நெருங்கவும், ஆன்மீக வழிகாட்டல்களைப் பெறவும் அந்த நற்பண்புகளில் உறுதியாக நிலைத்து நிற்கவும் அது நம்மைத் தயார் படுத்தியிருக்கிறது.

ஒப்பீட்டளவில் பார்க்கும் போது தற்போதைய சூழ்நிலையில் , இலங்கையில் வெள்ளப் பெருக்கு, மண் சரிவு போன்ற காலநிலை சீர்கேடுகளினால் பாதிக்கப்பட்ட மக்கள் அனுபவித்துவரும் துன்பங்களுக்கு அப்பால், உலகின் பல்வேறு பகுதிகளில் முஸ்லிம்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் நோன்பின் மாண்புகளை நன்கு அனுசரித்து, உச்சக் கட்ட சகிப்புத் தன்மையுடன் பொறுமையைப் பேணி வருவதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

அதே வேளை, காஸா வில்,பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் மூர்க்கமான தாக்குதலாலும், இப்பொழுது ஈரான் மீதுஅடர்ந்தேற்றப்பட்டுள்ள அமெரிக்க–இஸ்ரேல் யுத்தத்தினாலும் குறிப்பாக மத்திய கிழக்கில் உயிரிழப்புகள் மற்றும் ஏனைய பாதிப்புகளினால் துன்புறுபவர்களுக்காக எங்கள் இதயங்கள் இரத்தத்தைச் சிந்துகின்றன.

மத்திய கிழக்கில் மூண்டுள்ள யுத்தம் அவசரமாக முடிவுக்கு வருவதற்கும், நிரந்தரமான சமாதானமும், நீதியும் நிலைநாட்டப்படுவதற்கும் இறைவனிடம் நாங்கள் மனம் உருகப் பிரார்த்திப்போமாக.

இந்தப் பெருநாள் நமது சகோதரத்துவப் பிணைப்புகளை வலுப்படுத்தி, ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஒத்துழைக்க நம்மை ஊக்குவிக்குமாக.

அனைவருக்கும் இனிய "ஈதுல் பித்ர்" பெருநாள் வாழ்த்துக்கள்

ஈத் முபாரக்!

## போர்ச் சூழ்நிலை நீங்கி மீண்டும் நிரந்தர அமைதியும் சமாதானமும் நிலவ பிரார்த்திப்போமாக!

### பாராளுமன்ற உறுப்பினர் பைஸர் முஸ்தபா



( ஐ. ஏ. காதிர் கான் )

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் நெருக்கடியான போர்ச் சூழ்நிலை வெகு விரைவில் நீங்கி, உலகளாவிய ரீதியில் மீண்டும் நிரந்தர அமைதியும் சமாதானமும் நிலவ, இப்புனித நன்நாளில் எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் இரு கரமேந்திப் பிரார்த்திப்போமாக என, பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா, தனது நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் இடம்பெற்று வரும் மனிதாபிமானமற்ற அனைத்து இராணுவ நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். யுத்தத்தில் ஈடுபடும் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள், இஸ்லாமிய போதனைகளுக்கும் சர்வதேச சட்டங்களுக்கும் முரணானவையாகும்.

இந்த மோதல்கள் இன்று உலகளாவிய ரீதியில் சமூக, பொருளாதார, உளரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதுடன், இராஜதந்திர கட்டமைப்புகளைச் சிதைக்கும் நிலையையும் எட்டியுள்ளன.

மத்திய கிழக்குப் பிராந்தியம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளன. குறிப்பாக, இராணுவ மோதல் அதிகரிப்பு மற்றும் அதன் நேரடி விளைவுகளால் எரிசக்தித் துறை மற்றும் விநியோகச் சங்கிலிகளில் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. சர்வதேச ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பின் மூலமே இந்த சவால்களை எதிர்கொள்ள முடியும்.

பதற்றம் அதிகரிப்பதை உடனடியாக நிறுத்துவதற்கும், பதற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், இராஜதந்திரத் தீர்வுகள் மூலம் பிராந்தியத்தில் பாதுகாப்பையும் ஸ்திரத்தன்மையையும் வலுப்படுத்துவதற்கும் சர்வதேச மற்றும் பிராந்திய முயற்சிகளைத் தீவிரப்படுத்துவதும் இத்தருணத்தில் மிக மிக முக்கியமானதாகும்.

வெடி குண்டுகளால் அதிகாரத்தை நிலைநாட்ட முடியுமே தவிர, அமைதியை ஒருபோதும் நிலைநாட்ட முடியாது. எனவே, அமைதியை நிலைநாட்ட உலக வல்லரசுகள் இத்தகு நேரத்தில் அவசரமாக முன்வர வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் ஜனாதிபதியும் இலங்கை அரசாங்கமும் தூரநோக்குப் பார்வையோடு செயற்பட்டு வருவதை தான் மெச்சுவதாகவும் குறிப்பிட்டுள்ள பைஸர் முஸ்தபா, கடினமான சூழலில் இலங்கை கடற்பரப்பு எல்லைக்கு ஈரானிய மாலுமிகளை அழைத்து வருவதற்கான அவசர ஒழுங்குகளை மேற்கொண்ட, சர்வதேச எல்லையைத் தாண்டிய ஜனாதிபதியின் இந்த மனித நேய செயலை, இலங்கை வாழ் அனைத்து இன மக்கள் சார்பாக தான் இப்பெருநாள் நன்நாளில் வரவேற்று நன்றி தெரிவிப்பதாகவும், பாராளுமன்ற உறுப்பினர் பைஸர் முஸ்தபா மேலும் அந்த வாழ்த்துச் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அருட்கொடைகள் நிறைந்த பெருநாளாக அமையட்டும்

### காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி



பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் (அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையயானுமாகிய அல்லாஹ் வின் திருப்பெயரால்...)

ஈதுல் பித்ர் (நோன்புப் பெருநாள்) திருநாளை முன்னிட்டு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். எல்லாம் வல்ல அல்லாஹ் இப்பெருநாளை அனைவருக்கும் நலம், வளம் மற்றும் அருட்கொடைகள் நிறைந்ததாக மீண்டும் மீண்டும் வழங்கி அருள வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

இந்த புனிதமான தருணத்தில், இரு புனிதஸ்தலங்களின் காவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அசீஸ் அல் ஸுஊத் அவர்களுக்கும், பட்டத்து இளவரசர் மற்றும் பிரமர் முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அசீஸ் அல் ஸுஊத் அவர்களுக்கும், சவூதி அரேபிய மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் மற்றும் மக்களுக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், இலங்கைதொடர்ந்தும் முன்னேற்றமும் செழிப்பும் அடையவும், உலகம் முழுவதும் பாதுகாப்பும், ஸ்திரத்தன்மையும், அமைதியும் நிலவ வேண்டுமெனவும் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவரதும் நற்செயல்களை அங்கீகரிக்க வேண்டுமெனவும், இந்த பெருநாளை மக்களிடையே சகிப்புத்தன்மை, சகோதரத்துவம் மற்றும் ஒற்றுமை ஆகிய விழுமியங்களை வலுப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக மாற்றியருள வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறேன். இனிய பெருநாள் வாழ்த்துக்கள்.

காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி
இரு புனித ஹரம்களின் காவலரின் (சவூதி அரேபியாவின்)
இலங்கைக்கான தூதுவர்

## இஸ்லாம் என்பது அமைதி, கருணை மற்றும் மகிழ்ச்சியை வலியுறுத்தும் மார்க்கமாகும் மனிதகுலம் முழுவதும் அமைதியாகவும் நலமாகவும் வாழ வேண்டும் என்பதே அதன் உயர்ந்த போதனை..!

### கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்



புனித ரமழான் மாதத்தின் நோன்பு மற்றும் வணக்க வழிபாடுகளை நிறைவு செய்து இன்று மகிழ்ச்சியுடன் ஈதுல் பித்ர் பெருநாளை கொண்டாடும் அனைத்து இஸ்லாமிய உடன் பிறப்புக்களுக்கும் என் இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாற கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் குறிப்பிட்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது..,

ஒரு மாத காலம் நோற்கப்பட்ட நோன்பானது பசியையும் தாகத்தையும் தாங்குவது மட்டுமல்லாது மனிதனின் மனதையும் ஆன்மாவையும் தூய்மைப்படுத்தும் உயர்ந்த ஆன்மிகப் பயிற்சியாகும். தன்னடக்கம், கருணை, சகிப்புத் தன்மை, ஏழை எளியவர்களிடம் இரக்கம் காட்டுதல் போன்ற உயர்ந்த பண்புகளை வளர்க்கும் அரிய வாய்ப்பாக ரமழான் மாதம் விளங்குகிறது.

ஈதுல் பித்ர் பெருநாள் நமக்கு மகிழ்ச்சியையும் பகிர்வையும் நினைவூட்டும் ஒரு சிறப்பு நாளாகும். இந்த நாளில் நாம் ஒருவருக்கொருவர் அன்பையும் ஒற்றுமையையும் வளர்த்துக் கொண்டு, சமாதானத்துடனும் புரிந்துணர்வுடனும் வாழ வேண்டும் என்ற செய்தியையும் இந்த புனித நாள் எடுத்துரைக்கிறது.

பல இனங்களும் பல மதங்களும் இணைந்து வாழும் எமது நாட்டில், ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் பரஸ்பர மரியாதை மேலும் வலுப்பெற வேண்டும் என்பது எனது விருப்பமாகும். இந்த பெருநாள், அனைத்து இலங்கை மக்களிடையே சகோதரத்துவ உணர்வையும் மனித நேயத்தையும் மேலும் உறுதிப்படுத்தட்டும்.

இஸ்லாம் என்பது அமைதி, கருணை மற்றும் மகிழ்ச்சியை வலியுறுத்தும் மார்க்கமாகும். மனிதகுலம் முழுவதும் அமைதியாகவும் நலமாகவும் வாழ வேண்டும் என்பதே அதன் உயர்ந்த போதனையாகும்.

ஆகையால் இந்த பெருநாள், உலகெங்கும் அமைதி நிலவவும், மனிதர்களுக்கிடையில் அன்பும் புரிந்துணர்வும் அதிகரிக்கவும் ஒரு வாய்ப்பாக அமையட்டும்.

இந்த மகிழ்ச்சியான ஈதுல் பித்ர் பெருநாளில், எல்லாம் வல்ல அல்லாஹ் இலங்கை நாடுக்கும் அதன் மக்களுக்கும் அமைதி, ஒற்றுமை, அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் அருள்வானாக என்றும், தற்போதைய சூழ்நிலையில் உலகம் முழுவதும் பூரண சமாதானமும் அமைதியும் நிலவச் செய்வானாக என்றும் பிரார்த்திக்கிறேன்– எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வேதம் வழங்கப்பட்ட சமூகங்களை ஏமாற்றும் ஏகாதிபத்தியம் தோல்வியுறும்! பெருநாள் பிரார்த்தனைகள் பெறுமதியாகட்டும்

### மக்கள் காங்கிரஸ் தலைவர், றிஷாட் எம்.பி



சத்தியம் வென்று, அசத்தியம் அழியுமென்ற நம்பிக்கை இஸ்லாமியர்களின் அடிப்படைகளிலொன்று எனத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட்பதியுதீன், இவ்வாறான மற்றொரு இறை நம்பிக்கையில் புனித நோன்பு பெருநாளைக் கொண்டாடும் சகல முஸ்லிம்களுக்கும் "ஈத்முபாறக்"உரித்தாகட்டும் எனத் தெரிவித்துள்ளார்.

புனித நோன்பு பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட்பதியுதீன் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இஸ்லாத்தின் ஐந்து பிரதான தூண்களில் நோன்பும் ஒன்று.

ஏனைய கடமைகளை விடவும் இறைவனுடன் விசுவாசிகளை இரகசியமாக இணைக்கும் கடமையே நோன்பு. ஐம்புலன்களையும் ஆன்மீக உணர்வுக்குள் அடக்கி, அல்லாஹ்வுக்காக நல்லமல் செய்தோம்.

ரமழானில் நாம் செய்த பிரார்த்தனைகள் அனைத்தையும் அல்லாஹ் அருள்பாலிப்பானாக. அநியாயத்துக்குள்ளாக்கப்பட்டுள்ள எமது சமூகத்துக்காக (உம்மத்) நாம் கையேந்தினோம். எமது பிரார்த்தனைகள் வீணாகவில்லை. இதற்கான சான்றுகளையே நாம் கண்டு வருகிறோம். தீர்க்கதரிசிகளின் தேசமான மத்தியகிழக்கைச் சூறையாட வந்த ஏகாபத்தியம் ஏமாற்றத்துடன் திரும்பும் வேளையிது.

இறைதூதர் இப்றாஹிமின் மதங்கள் காலூன்றியது மட்டுமன்றி வேஷரூன்றியதும் இந்த மத்திய கிழக்கில்தான். யூதம்,கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் ஆகிய வேதங்கள் தோன்றிய இப்புனித தேசத்தை, இன்று சில தீய சக்திகள், தீயிலிடத் துடிப்பது ஏன்?.வேதம் வழங்கப்பட்ட சமூகத்தினர் மத்தியில் வேற்றுமையைத் தூண்டி, லௌகீக ஆதாயங்களை அடைய முயலும் எந்தத் தரப்பினரும் வெற்றி பெறப்போவதில்லை. "ஆப்ரஹாம்" உடன்படிக்கையின் கீழ், காசா மற்றும் இஸ்ரேல் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

சர்வதேச விவகாரங்களை உள்நாட்டுக்குள் நுழைப்பதாக எவரும் கருதக் கூடாது. முஸ்லிம்கள் எங்கிருந்தாலும் எமது உடன்பிறப்புகளே. ஆக்கிரமிப்புக்கள் எங்கு நடந்தாலும் அது அநியாயமே. இவற்றை துணிச்சலுடன் எமது கட்சி எதிர்க்கும்.

எண்ணெய் தேசங்கள் பற்றி எரிவதால் ஏற்படப்போகும் உள்நாட்டு விளைவுகளிலும் கவனம் செலுத்துவது அவசியம்.

எரிபொருளுக்கான தட்டுப்பாடுகள் எமது மக்களை சிக்கலுக்குள்ளாக்க கூடாது. கடந்த கால அனுபவங்களை நாம் மறப்பதற்கில்லை. இருந்தாலும் எவ்வித சிரமங்களுமின்றி முஸ்லிம்கள் நோன்பு பெருநாளைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியம். முஸ்லிம் சகோதரர்களுக்கு"

ஈத்முபாறக்

# எரிபொருள் நெருக்கடியும் பொருளாதார திட்டமிடலும்



அஷ்ஷைக் பளீல் (நளீமி)

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையை தொடர்ந்து முழு உலகத்திலும் எரிபொருள் தட்டுப்பாடும் அதனைத் தொடர்ந்து சங்கிலித் தொடராக பல பொருளாதார நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ளன. இந்த யுத்தம் இன்னும் தொடருமா இல்லையா என்ற கேள்வி ஒரு புறமிருக்க தற்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையிலிருந்து வெளி வருவதற்கே வெகு காலம் எடுக்கலாம்.

எனவே இந்த சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு ஏற்றாற் போல் நாம் எம்மை தயார் செய்து கொள்வது அவசியமாகும். அந்த வகையில் திட்டமிடல் என்பது அவசியம் பொருளாதார த்தையும் வாழ்வு ஒழுங்கையும் நாம் திட்டமிட்டு கொள்ள வேண்டும்.

### வீண்விரயம், ஆடம்பரம்

வீண்விரயம், ஆடம்பரமான செலவுகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்த வேண்டும். "வீண்விரயம் செய்பவர்கள் ஷைத்தானின் சகோதரர்கள்" என குர்ஆனிலே அல்லாஹ் கூறுகின்றான். இவ்வாறு பொதுவாக வீண்விரயத்தையும் ஆடம்பரமான செலவுகளை இஸ்லாம் தடுத்திருந்தாலும் குறிப்பாக இந்த நெருக்கடியான சூழ்நிலை பின்னர் நாம் அவற்றை கண்டிப்பாகவும் உடனடியாகவும் தவிர்க்க வேண்டும்.

பெருநாளை நாம் அண்மித்துக் கொண்டிருக்கிறோம். இந்தக் காலப்பிரிவில் புத்தாடைகளுக் காகவும் பெருநாள் தினத்தன்றும் அதற்குப் பின்னரும் விதவிதமான உணவுகளுக்காக அளவுமீறி செலவு செய்வதையும் பெருநாள் தினத்திலும் அதற்கு அடுத்த தினங்களிலும் சுற்றுப்பயணங் களை மேற்கொள்வதையும் இயலுமானவரை தவிர்க்கப்பது நல்லது. அனுமதிக்கப்பட்ட விடயங்களை கூட குறைத்துக் கொள்ள வேண்டும். கட்டாய மான பயணங்களை போயே ஆக வேண்டும் என்ற சூழ்நிலை இருந்தால் மாத்திரமே அப்பயணங்களை நாம் மேற்கொள்வதில் தப்பிருக்க மாட்டாது.

வீட்டில் மின்சார பாவனையை இயன்றவரை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். தேவையற்ற மின் விளக்குகளை அணைத்துக் கொள்வதும் மிகவும் அவசிய மென்று கருதும் மின்சார உபகரணங்களை பயன்படுத்து வதை தவிர மேலதிகமான பாவனைகளை குறைத்துக் கொள்வது நல்லது.

சொந்த வாகனங்களை வைத்திருப்பவர்கள் இயன்ற வரை அவற்றில் பயணங்களை மேற்கொள்வதை குறைத்துக் கொள்வது சிக்கனமாக அமையும். அதற்குப் பதிலாக முடிந்தவரை பொதுப் போக்கு வரத்து சாதனங்களை பயன்படுத் தலாம். அல்லது துவிச் சக்கர வண்டிகளை பயன்படுத்திக் கொள்ளலாம். நடந்து போக வேண்டிய தூரங்களுக்கு கூட மோட்டார் சைக்கிள்களை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்வதும் சிக்கனத்தில் ஒரு பகுதியாகவே இருக்கும்.

சுயதொழில் முயற்சிகள் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மரக்கறி வகைகள், பழ வகைகளுக்கான விலைகள் பெரும்பாலும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதினால் தமது வீட்டைச் சூழ காணிகள் இருப்பவர்கள் இயன்றவரை வீட்டுத் தோட்டத்தை ஒழுங்கு படுத்தி அதில் முடியுமான தானியங்களை, பயிர் பச்சைகளை வளர்த்துக் கொள்ள முடியும். வீடுகளில் கோழிகளை அல்லது ஆடு மாடுகளை வளர்க்க முடியுமாக இருந்தால் இறைச்சி முட்டை போன்றவற்றிற்கு மேலதிகமாக செலவு செய்வதைக் குறைத்துக் கொள்ளலாம்.

வறுமை நிலவும் இக்காலத்தில் அதிகமாக அல்லாஹ்விடத்தில் வறுமையை விட்டும் பாதுகாப்புத் தேட வேண்டும். அதேநேரம் வறுமையில் இருந்து விடுபடு வதற்கான முயற்சிகளிலும் முறையாக ஈடுபட வேண்டும். பிறரில் தங்கியிருப்பது என்ற







நிலையிலிருந்து விடுபட்டு சுயமரியாதையோடு ஒவ்வொரு வரும் வாழப் பழக வேண்டும். முயற்சியும் துஆவும் ஒரு சேர அமைகின்ற பொழுதுதான் அது உண்மையான 'தவக்குல்' ஆக மாறும்.

### ஸகாத், ஸதகா

ஸகாத் வழங்குவதற்கு கடமைப் பட்ட செல்வந்தர்கள் அவற்றை ஏனைய காலங்களை விடவும் குறிப்பாக இக்கால பிரிவில் முறையாக கணித்து வழங்க வேண்டும். அவ்வாறு ஸகாத்தை பரிபூரணமாக வழங்கியும் கூட ஏழைகளது தேவைகள் பூர்த்தியாக வில்லை என்றால் 'ஸதகாக்கள்' மூலமாக அவற்றை நிறைவு செய்ய வேண்டும். ஸகாத், ஸதகாவின் போது உறவினர்கள், அயல்வீட்டார் மற்றும் சொந்த ஊரிலேயே வறுமைப்பட்டவர் களாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது சாலச் சிறந்ததாகும்.

### உம்ராவும் ஹஜ்ஜும்

உம்ராவுக்காக நிய்யத்து வைத்திருந்தவர்களுக்கு இந்த தடவை அது பெரும்பாலும் சாத்தியப்படவில்லை.எனவே அத்தகையவர்கள் அப்பணத்தை ஏழைகளுக்காக கொடுக்கலாம். இலங்கையில் நான்கில் ஒரு பகுதியினர் வறுமைக் கூட்டின் கீழ் வாழ்வதாக தகவல்கள் கூறுகின்றன.

கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் இலங்கையின் சுதந்திரத் திற்குப் பிந்திய வரலாற்றில் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் காரணமாக 2022 இல் வறுமை வீதம் 25 சதவீதம் வரை அதிகரித்தது. இது 2019 இல் 11.3 வீதத்திலிருந்து பாரியளவில் அதிகரித்துள்ளது. நாட்டின் சனத்தொகையில் நான்கில் ஒரு பங்கினர் வறுமையில் இருக்கிறார் கள் என உலக வங்கியின் அறிக்கை கூறுகிறது.

https://www.worldbank.org/ta/news/feature/2023/06/19/3-ways-to-make-social-protection-work-for-sri-lanka-s-poor-and-vulnerable#

மனிதர்களது அடிப்படை தேவைகளான உணவு, உடை,இல்லையிடம் ,மருத்துவம், கல்வி போன்றவற்றிற்கு செலவழிப்பதற்கு வசதியே இல்லாத பல மில்லியன் கணக்கா னவர்கள் இலங்கையில் வாழ்கிறார் கள் என்பதை கவனத்தில் கொண்டு தான் இதற்குப் பிறகும் கூட உம்ராவுக்கு போகின்றவர்கள் சிந்திக்க வேண்டும்.இவ்வருடம் ஹஜ்ஜுக்காக நிய்யத்து வைத்திருப்பவர்கள் அது முதலாவது ஹஜ்ஜாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் இரண்டாம் மூன்றாம் அல்லது சுன்னத்தான ஹஜ்களுக்காக செல்வதை தவிர்த்து அப்பணத்தை ஏழை எளியவர்களுக்கு கொடுக்கலாம். சுன்னத்தான ஹஜ்ஜுக்கு செல்வதனை விடவும் பல மடங்கு நன்மைகள் அதற்காக கிடைக்கும்.

### யூஸுப்(அலை) அவர்களது திட்டமிடல்

எகிப்து நாட்டில் ஏழு வருடங்கள் பஞ்சம் நிலவலாம் என்று எதிர்வு கூறப்பட்ட சந்தர்ப்பத்தில் நபி யூசுப் (அலை) அவர்கள் அரசனை அணுகி இந்த சூழ்நிலையை எவ்வாறு வெற்றி கொள்ளலாம் என்பதற்கான தனது திட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

அவர்கள் :

"قَالَ تَزْرَعُونَ سَبْعَ سِنِينَ دَأَبًا"

"நீங்கள் தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு (நல்லபடியாக) விவசாயம் செய்வீர்கள்(யூசுப்: 47)

"فَمَا حَصَدْتُمْ فَذَرُوهُ فِي سُنْبُلِهِ إِلَّا قَلِيلًا مِمَّا تَأْكُلُونَ"

"பிறகு நீங்கள் அறுவடை செய்த - (விளைச்ச)லில், நீங்கள் உண்பதற்கு வேண்டிய ஒரு சிறிய அளவைத்தவிர, அதனை அதற்குரிய கதிர்களிலேயே விட்டு வையுங்கள்." (யூசுப்: 47) என்றார்.

வளமான ஆண்டுகளில் வேளாண் மை உற்பத்தியை அதிகப்படுத்தி அறுவடை செய்யப்பட்ட பயிர்களை பாதுகாப்பாக, இயற்கை சேமிப்பு முறையில் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதும், பயன்பாட்டை கட்டுப்படுத்து வதும் (செலவுகளை குறைப்பதும்) எதிர்வரவிருக்கும் நெருக்கடியான காலப்பிரிவை வெற்றிகரமாக எதிர்கொள்ள உதவும் என்பது அவர்களது திட்டமாக இருந்தது.

"مَا قَدَّمْتُمْ لَهُنَّ إِلَّا قَلِيلًا مِمَّا تُحْصِنُونَ
ثُمَّ يَأْتِي مِنْ بَعْدِ ذَٰلِكَ سَبْعٌ شِدَادٌ يَأْكُلْنَ"

"பின்னும், அதற்கப்பால் கடினமான (பஞ்சத்தையுடை வருடங்கள்) ஏழு வரும் நீங்கள் பஞ்சமான ஆண்டுகளுக்காக பத்திரப்படுத்தி முன்னமேயே வைத்திருப்பதில் சொற்ப (அளவை)த் தவிர மற்றதை அவை (அந்த பஞ்ச ஆண்டுகள்) தின்று விடும்" (யூசுப்: 48) என்றார்.

மேலும் மக்களுக்கு நம்பிக்கை யூட்டும் வகையில் அவர்கள்:

"ثُمَّ يَأْتِي مِنْ بَعْدِ ذَٰلِكَ عَامٌ فِيهِ يُغَاثُ النَّاسُ"

"பின்னும், அதற்கப்பால் ஓராண்டு வரும், அதில் மக்களுக்கு நல்ல மழை பெய்யும் அதில் (விளையும் கனிகளிலிருந்து) அவர்கள் பழரசங்கள் பிழிந்து (சுகமாக) இருப்பார்கள்" என்று கூறினார் (யூசுப்: 49)

இந்தத் திட்டம் நெருக்கடி முடிவடையும் என்ற நம்பிக்கையை மக்களிடம் உருவாக்கியது. அது மக்களை உழைக்கவும் பொறுமையுடன் எதிர்கொ ள்ளவும் ஊக்கப்படுத்தியது.

### பெறப்படும் பாடங்கள்:

இந்த சம்பவம் இஸ்லாம் நெருக்கடிகளை சமாளிக்க அறிவியல் அடிப்படையிலான திட்டமிடலை (தத்பீர்) வலியு றுத்துகிறது என்பதை காட்டுகிறது. மேலும், திறமையான நிர்வாகம் என்பது தெளிவான மூலோபாய பார்வையும் நடைமுறை உண்மையையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது.

எனவே, தற்போதைய பொருளாதார நெருக்கடியை அல்லாஹ்வின் அருளால் வெற்றிகரமாக எதிர்கொள்ள,

1. எப்போதும் பொருளாதாரத் திட்டமிடல் அவசியம்.
2. உற்பத்தி முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. வீண்விரயம் ஆடம்பரம் தவிர்க்கப்படுவது அவசியம்.
4. ஸகாத், ஸதகா என்பன முறையாக சேகரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுதல் வேண்டும்.
5. பெற்றார், உற்றார், உறவினர்கள், அயல் விட்டாருக்கான உரிமைகள் முறையாக வழங்கப்பட வேண்டும்.
6. அப்போதும் சமூகத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத போது தனவந்தர்களது செல்வங்களிலிருந்து எடுத்துக் கொடுக்கப்பட வேண்டும்.
7. திட்டமிடல், முயற்சி, ஸகாத் ஸதகா, அல்லாஹ்விடம் துஆ

# ஆலங்குடா விவசாயிகளின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் பிரதி அமைச்சரிடம் கையளிப்பு





**(சியாஜ்)**

கற்பிட்டி ஆலங்குடா பிரதேச விவசாயிகளின் சார்பில், ஆலங்குடா பிரஜா சக்தி அமைப்பின் மூலம் தயாரிக்கப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜர் விவசாய மற்றும் கால்நடைகள் பிரதி அமைச்சரிடம் கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட்டது.

கற்பிட்டி ஆலங்குடா பிரதேச விவசாயிகள் எதிர்கொண்டு வரும் முக்கிய பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து இந்த மகஜர் மூலம் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. குறிப்பாக மின்சார பிரச்சினைகள், நிலத்தடி நீர் பாதுகாப்பு, விவசாய உபகரணங்கள், மண் பரிசோதனை மையம், விவசாயிகளுக்கான காப்பீட்டு திட்டம், ஓய்வூதிய திட்டம், விவசாயத் தோட்டங்களுக்கு செல்லும் வீதிகள் சீரமைத்தல் போன்ற பல முக்கிய கோரிக்கைகள் இம் மகஜரில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக கற்பிட்டி ஆலங்குடா விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படவும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு விரைவான தீர்வுகள் கிடைக்கவும் அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் நம்புவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம்.பைசல், கற்பிட்டி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம்.றிகாஸ் மற்றும் உப தலைவர் சமன் குமார ஆகியோர் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பாரதி கண்ட புதுமைப் பெண்ணுக்காக உம்மு ஹானி புஷ்ராவுக்கு செந்தமிழ் அருவி விருது





**( ஐ. ஏ. காதிர் கான் )**

2026 ஆம் ஆண்டுக்கான மகளிர் தின விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கிய, இந்தியா - தமிழ்நாடு, கரூர் - பள்ளப்பட்டியைச் சேர்ந்த கவி கற்பக விருட்ச விருது பெற்ற குட்டிப் பெண் ஆளுமை இளங்கவி செல்வி அ.ம. உம்மு ஹானி புஷ்ரா, 'செந்தமிழ் அருவி" என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பள்ளப்பட்டி - "உஸ்வத்துல் ஹஸனா" பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்பில் கல்வி பயிலும் இளம் மாணவியான இவர், "பாரதி கண்ட புதுமைப்பெண்" எனும் தலைப்பில் தனது நீண்ட சிறப்புச் சொற்பொழிவையாற்றி இந்த விருதினை வென்றுள்ளார்.

மயிலாடுதுறை மாவட்ட அஞ்சல் மற்றும் ஆர்.எம்.எஸ். ஓய்வூதியர் சங்கம், இம்மாணவியின் தி-றமையைப் பாராட்டி, மயிலாடுதுறை - வருவாய்த்துறை ஊழியர் சங்கக் கட்டிட வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற மாபெரும் சிறப்பு விருது வழங்கல் விழா நிகழ்வின்போது, இவருக்கு செந்தமிழ் அருவி விருது, நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் என்பனவற்றை வழங்கி பாராட்டி கௌரவித்தது.

சங்கத்தின் சார்பில், மாவட்டத் தலைவர் ஆர். சுந்தரம், மாவட்டச் செயலாளர் தோழர் சாமி. கணேசன், மாவட்டப் பொருளாளர் பா. ஜெயபிரகாசம், அஞ்சல் ஓய்வூதியர் செ. ரேணுகா தேவி ஆகியோர் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்வில் சிறப்புப் பங்கேற்றனர்.

# "நான் நேசிக்காத ஜே.ஆர்" நூல் வெளியீடு

முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆற்றிய ஜே.ஆர். ஜயவர்தன நினைவுப் பேருரையிலிருந்து தொகுக்கப்பட்ட "நான் நேசிக்காத ஜே.ஆர்" என்ற நூலும் அதன் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளிலான பதிப்பு நூல்களும் எதிர்வரும் 2026 மார்ச் 30 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.15 மணிக்கு கொழும்பு ஜே.ஆர். ஜயவர்தன கேந்திர நிலையத்தில் (191, தர்மபால மாவத்தை, கொழும்பு 07) வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.




இந்நிகழ்வில், சிங்கள நூல் குறித்து அரசாங்க தகவல் திணைகளத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகமும், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் முன்னாள் தலைவரும், இலங்கை இதழியல் கல்லூரியின் முன்னாள் தலைவருமான கலாநிதி ரங்க கலன்சூரிய, தமிழ் நூல் குறித்து ஐக்கிய இராச்சிய இஸ்லாமிய அறக்கடளையின் தலைவரும், குழந்தைகள் நல விசேட வைத்திய நிபுணருமான டாக்டர் முஸ்தபா ரயீஸ், ஆங்கில நூல் குறித்து வெலிகம மாநகர சபையின் முன்னாள் தவிசாளர் ரெஹான் ஜயவிக்ரம ஆகியோர் விசேட கருத்துரைகளை நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனுராதபுரம் சாஹிராவில் நடைபெற்ற கத்தார் தொண்டு நிறுவனத்தின் மிதி வண்டி வழங்கும் நிகழ்வு

**(எம்.ரீ.ஆரிப்)**

வடமத்திய மாகாண ஆளுநரின் வேண்டுகோளின் பேரில் கத்தார் தொண்டு நிறுவனம் வடமத்திய மாகாணத்தில் உள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கு உதவும் வகையில் மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்வு அனுராதபுரம் சாஹிரா கல்லூரியில் நடைபெற்றது.

இதன் போது ஆளுநரின் இணைப்புச் செயலாளர் ஆனந்த ரத்நாயக்க, மக்கள் தொடர்பு அதிகாரி அசேல விஜேரத்ன, கத்தார் தொண்டு நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதி மற்றும் சாஹிரா கல்லூரியின் அதிபர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# கஹட்டோவிட்ட ஜாமிஉத் தௌஹூதில் பிரியாவிடையும் பரிசளிப்பு நிகழ்வும்



கஹட்டோவிட்ட ஜாமிஉத் தௌஹூத் ஜூம்ஆப் பள்ளியில் இயங்கி வரும் அல் மத்றஸதுல் இஸ்லாமிய்யாவில் மாணவர் பிரியாவிடை மற்றும் முஸாபகது ரமழான் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது. காலை 9.00 மணியளவில் ஆரம்பமான நிகழ்வுக்கு மத்றஸா குழுவின் தலைவர் மௌலவி எம்.என்.எம். பைரூஸ் தலைமை தாங்கினார்.

மத்றஸா மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பிரியாவிடை பெற்றுச் செல்லும் மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இங்கு மேடையேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் ஜாமிஉத் தௌஹூத் ஜூம்ஆப் பள்ளித் தவைவர் அல்ஹாஜ் இஸ்மாயீல் , செயலாளர் அல்ஹாஜ் எம். என்.எம். ஜௌஸி பொருளாளர் சப்ராஸ் சேர் உட்பட மஸ்ஜித் மற்றும் மத்றஸாவின் நிர்வாக சபை உறுப்பினர்கள் உஸ்தாத் முஅல்லிமாக்கள் பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகளும் கலந்து கொண்டனர்.



நிகழ்வின் போது மத்றஸா மாணவர்களுக்கு பரிசில்களும் இலவச சீருடை மற்றும் புத்தகப் பைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

தகவல்.பள்ளிவாசல் இமாம் மௌலவி இனாமுல்லாஹ் (சலபி).

# இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நோன்புப் பெருநாள் சிறப்பு கவியரங்கம்

எதிர்வரும் நோன்பு பெருநாளை முன்னிட்டு நோன்பு பெருநாள் தினத்தன்று இலங்கை வானொலி முஸ்லிம் சேவை சிறப்பு கவியரங்கம் ஒன்றறினை ஏற்பாடு செய்துள்ளது.

முஸ்லிம் சேவை பணிப்பாளர் பாத்திமா ரினுசியாவின் பணிப்புரையில் ஏ.எம். முஹம்மது ரலீம் தயாரித்து வழங்கும் இச்சிறப்பு கவியரங்கு கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் தலைமையில் இடம் பெறும்.

பெருநாள் தினத்தன்று காலை 10:00 - 11:00. வரை 102.1 MHz, 102.3 MHz ஆகிய அலைவரிசைகளில் இக்கவியரங்கம் ஒலிபரப்பு செய்யப்படும் காத்தான்குடியைச் சேர்ந்த எம்.ஏ.எம்.நிஷவ்ஸ், குருநாகல் றஸ்மினா றாஸிக் கலேவெல ராஜன் நசீர்தீன், லுதுபியா லுக்மான், கலாநெஞ்சன் கெகிராவ சாஜஹான், சட்டத்தரணி நூருஸ் ஸப்னா சிராஜூதீன் ஆகிய கவிஞர்கள் இங்கு கவிதை பாட உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இஸ்லாமிய உலகிற்கு புதிய சிந்தனை திசையை வழங்கிய ஈரான் இஸ்லாமிய புரட்சி

இமாம் செய்யித் அலீ காமெனீ ஞாபகார்த்த ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த நினைவு பேருரை கொழும்பு தபாலக கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்றது.

சிரேஷ்ட சட்டத்தரணி மர்சூக் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில்,ஈரான் துதரகத்தின் கலாச்சார பிரிவின் பணிப்பாளர் அலி கிப்ரியானி, முன்னாள் ஈரான் நாட்டுக்கான துதுவர் சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம்.சஹீட்,

அகில இலங்கை வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் தலைவர் சாம் நவாஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது அமெரிக்க இஸ்ரேலுக்கு எதிரான கண்டன தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிகழ்வின் சிறப்பு பேருரையினை சித்தி லெப்பை ஆய்வுப் பேரவையின் தலைவரும், சட்டத்தரணியுமான எஸ்.எம்.என்.எஸ்.ஏ.மர்சூம் மௌலானா அவர்கள் ஆற்றினார்.

அவரது உரையின் முழுத்தொகுப்பு

உலக முஸ்லிம் சமூகத்தின் அரசியல் மற்றும் கருத்தியல் வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்வாக 1979 ஆம் ஆண்டு நடைபெற்ற ஈரானிய புரட்சி கருதப்படுகிறது. இந்தப் புரட்சி, ஈரானிய மக்களின் நேர்மையான எழுச்சிப் போராட்டத்தின் விளைவாக உருவானது. அந்த எழுச்சிக்கு வழிகாட்டியாக இருந்தவர் மறைந்த பெரும் தலைவர் இமாம் ஆயத்துல்லா ரூஹுல்லாஹ் கொமேனி.

இமாம் கொமேனி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் உருவான இந்தப் புரட்சி, வெறும் அரசியல் மாற்றமாக மட்டுமல்லாமல், இஸ்லாமிய உலகிற்கு ஒரு புதிய சிந்தனையையும் திசையையும் வழங்கிய இயக்கமாகவும் பார்க்கப்படுகிறது.

இழந்துபோன இஸ்லாமிய கிலாஃபத் சிந்தனைக்கு மாற்றாக, உலக முஸ்லிம் உம்மாவிற்கு ஒரு சர்வதேச தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தை இமாம் கொமேனி அவர்கள் தெளிவாக முன்வைத்திருந்தார்.

இந்தப் புரட்சியை உலகின் பல இஸ்லாமிய அறிஞர்கள் கவனித்தனர். குறிப்பாக தெற்காசியாவின் சிறந்த இஸ்லாமிய சிந்தனையாளர்களில் ஒருவரான செய்யித் அபுல் அஃலா மௌதூதி அவர்கள், இமாம் கொமய்னியின் புரட்சியை “ஒரு இஸ்லாமிய கலாசாரப் புரட்சி” எனக் குறிப்பிட்டிருகின்றார். அது வெறும் அரசியல் புரட்சி அல்ல, இஸ்லாமிய அடையாளத்தையும் மாண்புகளையும் மீட்டெடுக்கும் ஒரு இயக்கம் என்றும் அவர் விளக்கினார்.

இலங்கைச் சூழலிலும் இந்த சிந்தனைகள் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனகுறிப்பாக மறைந்த ஆ. உ. ஆ. யுளாசயகக தலைமையில் உருவான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் இயக்கத்தின் ஆரம்ப சிந்தனைகளில், இஸ்லாமிய உலகில் உருவான விழிப்புணர்வுகளின் தாக்கம் இருந்ததாக பல அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இஸ்லாமிய அரசியல் விழிப்புணர்வை வளர்த்த அந்த காலகட்டத்தில், ஈரான் இஸ்லாமியப் புரட்சியும் ஒரு முக்கிய உந்துசக்தியாக இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

இமாம் கொமேனி அவர்களின் அரசியல் சிந்தனை, குறிப்பாக இஸ்லாமிய ஆட்சியின் தத்துவம், உலக முஸ்லிம் சமூகத்தில் பெரும் விவாதங்களையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது.

இந்த சிந்தனைகள் இன்றும் பல அரசியல் மற்றும் சமூக இயக்கங்களில் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பின்னணியில், ஈரானின் முக்கிய தலைவராக விளங்கிய செய்யித் அலீ காமெனீ அவர்களின் பங்களிப்பும் குறிப்பிடத் தக்கது. உலக அரசியலில் இடம்பெறும் பல சவால்களுக்கு மத்தியில், இஸ்லாமிய உலகின் ஒற்றுமை மற்றும் அரசியல் சுயமரியாதையை வலியுறுத்தும் நிலைப்பாட்டை அவர் தொடர்ந்து முன்வைத்து வந்துள்ளார்.

இன்றைய உலக சூழலில், குறிப்பாக காசா போன்ற பகுதிகளில் நடைபெறும் மனிதாபிமான நெருக்கடிகள், முஸ்லிம் உலகில் ஒற்றுமையின் அவசியத்தை மீண்டும் நினைவூட்டுகின்றன.

சுன்னி மற்றும் ஷியா முஸ்லிம்களுக்கிடையிலான பிளவுகளை வல்லாதிக அரசியல் சக்திகள் பயன்படுத்த முயற்சிக்கின்றன என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன.

இந்தப் பிளவுகளை தாண்டி முஸ்லிம் உம்மாவின் ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்ற கருத்தும் பல மேடைகளில் வலியுறுத்தப்படுகிறது.

துருக்கி நாட்டின் ஜனாதிபதி தைய்யுப் எர்துக்கான் போன்ற தலைவர்களும் பல சந்தர்ப்பங்களில் முஸ்லிம் உலகின் ஒற்றுமையை வலியுறுத்தியு ள்ளனர்.

இவ்வாறு பார்க்கும்போது, 1979 ஆம் ஆண்டு நடைபெற்ற Iranian Revolution இன்றும் உலக முஸ்லிம் அரசியல் சிந்தனைகளில் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாகவே உள்ளது. அந்தப் புரட்சியின் அடிப்படை சிந்தனைகள்-இஸ்லாமிய அடையாளம், சமூக நீதி, அரசியல் சுயாட்சி மற்றும் ஒற்றுமை-இன்றும் பலரால் பேசப்பட்டு வருகின்றன.

நாங்கள் ஸியோனிசத்தை எதிர்க்கின்ற அதே வேளையில் யஸீதிசத்தையும் எதிர்க்கிறோம் என்பதை ஈரானியர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர்.

பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறைந்த பின்னர் ஆட்சியைப் பற்றிய பல்வேறு கருத்து முரண்பாடுகள் சஹாபாக்கள் இடையே தோன்றின. அந்த காலகட்டத்தில் பெருமானாரின் புனித சஹாபாக்கள் தியோக்ரசி (Theocracy) எனப்படும் இறையியல் அடிப்படையில் ஆட்சி நடத்தினர்.

ஆனால், பெருமானாரின் மறைவிற்குப் பின்னர் அவர்களின் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட வரலாற்று துன்பங்கள் அனைத்தும் இறுதியில் கர்பலா எனும் துயர சம்பவத்தின் உச்சிக்குச் சென்றது.

இமாம் /ஹுசைன் (ரழி) அவர்கள் கர்பலாவில் வீரமரணம் அடைந்தது இஸ்லாமிய வரலாற்றில் மிகுந்த வேதனையை ஏற்படுத்திய நிகழ்வாகும்.

அந்த காலத்தில் நடுநிலையாக இருந்த சில சஹாபாக்களும் பின்னர் அதன் தாக்கத்தை உணர்ந்தனர். அரசியல் சிக்கல்களால் அவர்கள் மௌனம் காத்தது உம்மத்திற்குப் பெரிய துயரத்தை ஏற்படுத்தியது என்பதை அவர்கள் தாமதமாக உணர்ந்தனர்.

இடையே தோன்றிய முரண்பாடுகளை நான் முழுமையாக குற்றம்சாட்ட விரும்பவில்லை.

ஸிப்பீன் போர் என்பது நான்காவது கலீபாவாக இருந்த இமாம் அலி (ரழி) அவர்களுக்கு எதிராக உமைய்யாக்களின் கலகமாகவே அமைந்தது. அது உம்மத்துக்குள் ஏற்பட்ட ஒரு அரசியல் கட்சியாகும் முரண்பாடு என்பதால் அதை பொறுத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால் ஸிஃப்பீன் போர், இமாம் அலி (ரழி) அவர்களின் கிலாபத்துக்கு எதிரான ஒரு பெரிய கலகமாகவே இருந்தது. அந்த போரில் பல சஹாபாக்கள் உயிரிழந்தனர்.

இதற்குப் பிறகு கவாரிஜ்கள் எனப்படும் பிரிவு தோன்றியது. உண்மையில் அவர்கள் இமாம் அலி (ரழி) அவர்களின் காலத்திலேயே தோன்றியிருந்தாலும், இமாம் /ஹுசைன் (ரழி) அவர்களின் ஷஹாதத்திற்குப் பின்னர் இந்த உள்கலவரகங்கள் மேலும் தீவிரமடைந்தன.

உமைய்யாக்களின் அரசியல் நடவடிக்கைகளை எதிர்த்து பேசாமல் மௌனம் காத்ததும் வரலாற்று தவறாகவே காலம் பின்னர் நிஷரூபித்தது.

இந்த வரலாற்றுப் பின்னணியில், முழு இஸ்லாமிய உம்மத்தையும் ஒரே அடிப்படையில் ஒன்றிணைக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அதற்காக ஒரு பொதுவான அகீதா அடையாளம் தேவைப்பட்டது.

அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், சஹாபாக்களை மதித்து, பொதுவான பாதையில் செல்லும் பெரும்பான்மையினரை ஒருங்கிணைக்க ஒரு பெயர் தேவைப்பட்டது. அப்போது “அஹ்லுஸ் சுன்னா வல் ஜமாஅத்” என்ற பெயர் உருவானது.

அந்த காலத்தில் இமாம் அலி (ரழி) அவர்களை நேசித்தவர்களும் அதே சமூகத்துக்குள் இருந்தனர். அவர்கள் அனைவரும் ஒரே புரிதலின் கீழ் ஒன்றிணைந்தனர்.

இதனால், அஹ்லுல் சுன்னத் வல் ஜமாஅத் என்ற பெயர், முன்பு பிரிந்திருந்த உம்மத்தைக் கூட்டி ஒன்றிணைத்த ஒரு பொதுப்பெயராக உருவானது.

இஸ்லாமிய அறிஞர்களான இமாம் புகாரி, இமாம் நஸாயி போன்றவர்கள் இந்தமரபைத் தொடர்ந்தனர். மேலும், இமாம் அபூ ஹனீஃபா போன்ற பெரிய இமாம்களும் அஹ்லுல் பைத் மீது அன்பும் மரியாதையும் கொண்டிருந்தனர் என்பது வரலாற்றில் அறியப்படும் உண்மை.

அதேபோல், பெருமானாரின் வம்சத்தில் தோன்றிய பெரிய ஞானியாகிய இமாம் ஜஃபர் சாதிக் அவர்கள் இஸ்லாமிய அறிவியல் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றினார்.

பல மத்ஹப்களின் இமாம்களுக்கும் அவர்கள் ஆன்மீக குருவாக இருந்ததாக அறியப்படுகிறது. இமாம் மாலிக், இமாம் அபூ ஹனீஃபா போன்ற பெரிய மதுஹபுகளின் அறிவியல் வளர்ச்சிக்கும் இமாம் ஜஃபர் சாதிக் அவர்களின் பங்களிப்பு இருந்தது.

இந்த வரலாற்றுச் சம்பவங்களும் அறிவியல் மரபுகளும் சுன்னி மற்றும் ஷியா எனப் பிரிந்திருந்த இரு தரப்பினரையும் ஒரே இடத்தில் இணைக்கும் பொதுப் புள்ளிகளாகும்.

அதனால் “அஹ்லுஸ் சுன்னா வல் ஜமாஅ” என்ற பெயர், உம்மத்தை ஒன்றிணைக்கும் வரலாற்றுப் பின்னணியில் உருவானது என்பதை மறுப்பதற்கு இடமில்லை.

இமாம் அபூ ஹனீஃபாவை நாம் விமர்சிக்க முடியாது. அதுபோலவே இமாம் ஷாஃபிஈயையும் விமர்சிக்க முடியாது.

ஆனால், சில ஆட்சியாளர்கள் செய்த துரோகங்களை வரலாறு மன்னிக்க முடியாது.

பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வம்சத்தை ஆதரித்தவர்களும், அவர்களின் சுன்னாவை பின்பற்றியவர்களும், குர்ஆனை விளக்கும் உரிமையை (Interpretation of the Qur’an) அஹ்லுல் பைத் வழியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருந்தனர். அந்த உரிமையை இமாம் அலி (ரழி) அவர்களின் ஆதரவாளர்கள் அஹ்லுல் பைத் குடும்பத்தினருக்கு வழங்கினர்.

அஹ்லுஸ் சுன்னா வல் ஜமாஅத்தின் நம்பிக்கையின்படி, இமாம் ஜஃபர் சாதிக் அவர்கள் வழங்கிய ஒரு பத்வாவை நேரடியாக மறுப்பதற்கான மனப்பாங்கு அஹ்லுஸ் சுன்னா அறிஞர்களிடத்தில் பொதுவாக இல்லை.

அவர்களின் அறிவும் ஞானமும் அனைவராலும் மதிக்கப்பட்டது.

ஆனால் வரலாற்றின் சில கட்டங்களில், யசீதிய அரசியலின் தொடர்ச்சியாக சில அரசியல் சக்திகள் உருவாகின. பின்னர் உதுமானிய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் போன்ற காலனித்துவ சக்திகளுடன் இணைந்த அரசியல் நிகழ்வுகளும் இஸ்லாமிய உலகில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தின.

இஸ்லாமிய கிலாபத் அமைப்பு வீழ்ந்தபின், அதை மீண்டும் நிறுவ வேண்டும் என்ற எண்ணத்தில் பல முன்னணி தலைவர்கள் போராடினர்.

அவர்களில் சையித் அபுல் அஃலா மௌதூதி, சையித் குத்ப், இமாம் ஹசன் அல்-பன்னா, இமாம் ஆயத்துல்லா ரு/ஹல்லா ஹோமேனி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்த அனைவரும் சமுதாயத்தில் ஒரு இஸ்லாமிய விழிப்புணர்வையும், இஸ்லாமிய அரசியல் சிந்தனையையும் உருவாக்க முயன்றவர்களாக கருதப்படுகின்றனர்.

அதில் இமாம் கொமேனி அவர்களுக்கும் ஈரானிய மக்களுக்கும் ஒரு வரலாற்றுப் பாக்கியம் கிடைத்தது.

தெற்காசிய சூழலில் இருந்த முஸ்லிம் தலைவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள் இதைப் பற்றி எப்படி சிந்தித்தார்கள் என்பதை ஆய்வு செய்யும் போது பல சுவாரசியமான கருத்துகள் வெளிப்படுகின்றன.

உதாரணமாக, இந்திய துணைக்கண்டத்தில் முஸ்லிம்களுக்கு தனி நாடு வேண்டும் என்ற எண்ணத்தை முதலில் வெளிப்படுத்தியவர் முஹம்மது அலி ஜின்னா மட்டும் அல்ல் அதற்கு முன்பே அல்லாமா இக்பால் அந்த சிந்தனையை முன்வைத்திருந்தார்.அல்லாமா இக்பாலின் புகழ்பெற்ற ஒரு கவிதைஉள்ளது.

“கிழக்கின் ஜெனிவாவாக தெஹ்ரான் (Tehran) என்று மாறுகிறதோ அன்றுதான் உலக முஸ்லிம்களுக்கு விடிவு காலம் ” என்று அவர் கூறியது ஆய்வுக்குரிய விடயம்.

அல்லாமா இக்பால், ஷியா அல்லது சுன்னி என்று பிரித்து பார்க்கவில்லை. அவர் பாரசீக நாகரிகத்தில் இருந்த ஆன்மீகத் தெளிவும், அரசியல் விழிப்புணர்வும், கலாசார வளமும் இணைந்து ஒரு பெரிய இஸ்லாமிய நாகரிகத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

அதனால் தான், அபுல் அஃலா மௌதூதியின் சீடர்களும், இக்பாலின் கவிதைகளையும் சிந்தனைகளையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

இலங்கையிலும் இந்த சிந்தனையின் தாக்கம் இருந்தது. உதாரணமாக எம். எச். எம். அஷ்ரப்,ரவூப் ஹகீம் போன்ற தலைவர்கள் ஜமாஅதே- இஸ்லாமி சிந்தனை மரபின் தாக்கத்துடன் வளர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது.

இதன் பின்னணியில் அபுல் அஃலா மௌதூதி போன்ற சிந்தனையாளர்களின் தாக்கமும், ஈரான் இஸ்லாமியப் புரட்சியின் அரசியல் தாக்கமும் இருந்தது என்ற வரலாறு மறுக்க முடியாது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, பின்னர் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகளில் இந்த விவாதங்களை வெளிப்படையாக பேசுவதற்கே சில தடைகள் உருவானது. சில நாடுகளில், ஈரான் இஸ்லாமியப் புரட்சியைப் பற்றிப் பேசுவதற்கே அரசியல் அழுத்தங்கள் ஏற்பட்டன.

இந்த நிலைமையில், சில சமுதாயங்கள் ஒரு வகையான மௌனத்தில் வாழ வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டன.

இன்று கூட சில முக்கியமான இஸ்லாமிய தலைவர்களின் மரணத்திற்குப் பின்னர் ஜனாஸா தொழுகை போன்ற அடிப்படை மத நடவடிக்கைகள் குறித்து கூட முஸ்லிம் சமூகத்தில் விவாதங்கள் எழுகின்றன.

இதனால், நாங்கள் எந்த திசையை நோக்கி செல்கிறோம் என்ற கேள்வி எழுகிறது.

இமாம் செய்யித் அலீ காமெனீ அவர்களின் பெயரில் ஒரு அமைப்பு உருவாகி இருப்பது ஆறுதல் தருகிறது. இங்கு நாம் சில விஷயங்களை பேச வேண்டிய ஒரு பொறுப்பும் உள்ளது.

எனவே, அல்லாமா இக்பால் அவர்களின் இன்னொரு கவிதையை மேற்கோள் காட்டவிரும்புகின்றேன்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில், முஸ்லிம்கள் பல்வேறு பிரிவுகளாகப் பிளந்து இருந்தனர்.

அரபி-அஜமி, ஷியா-சுன்னி என்று தங்களுக்குள் பிரிவினைகளை உருவாக்கிக் கொண்டிருந்த காலகட்டம் அது. அப்போது அல்லாமா இக்பால் ஒரு கவிதையில் முஸ்லிம்களை நோக்கி இவ்வாறு அழைத்தார்:

“ஓ முஸ்லிம்களே!
உங்களிடத்தில் உஸ்மானின் தயாளமும் இல்லை,
அலீயின் வீரமும் இல்லை.”

இங்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரழி) அவர்கள் வரலாறு கண்ட பெரிய கொடை வள்ளல் மனத்தைக் கொண்டவராக இருந்தது உண்மை. அதேபோல் இமாம் அலி (ரழி) அவர்களின் வீரமும் வரலாறு முழுவதும் புகழ்பெற்றது.

இந்த இரண்டு சிறந்த பண்புகளையும் இக்பால் தனது கவிதையில் சின்னங்களாக பயன்படுத்து கிறார். பிரிவினையை கொண்டாடும் இரு தரப்பினரையும் சிந்திக்கச் செய்யும் வகையில் அவர் இந்த வரிகளை எழுதினார்.

இன்று நிதர்சனமாகப் பார்த்தால், அரபு உலகின் சில பகுதிகளில் ஈரானைத் தாக்கும் விமானங்கள் கூட பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்று உலக சக்திகள் சுட்டிக்காட்டுகின்றன. சீனா, ரஷ்யா, வடகொரியா போன்ற நாடுகளும் இதைப் பற்றி பேசுகின்றன.

ஆனால் ஒரு முக்கியமான உண்மை உள்ளது. அரபு உலகின் பொதுமக்கள் தங்களது மன்னர்களுடன் இல்லை.அவர்கள் சியோனிசத்துடனும் இல்லை.அவர்கள் அமெரிக்க அரசியலுடனும் இல்லை.

இந்த சூழலில், தெற்காசிய மரபில் – குறிப்பாக இலங்கையின் முஸ்லிம் சமூகத்தில் – நம் முன்னோர்களை நினைத்துப் பார்க்க வேண்டிய நிலை உள்ளது.

இங்கு நான் மறைந்த தலைவர் எம். எச். எம். அஷ்ரப் அவர்களை குறிப்பிடுவது அரசியல் காரணத்திற்காக அல்ல. அவருடைய அறிவுசார் தைரியத்தை நினைவுகூர்வதற்காகத்தான்.

முன்பு சிலர் “மத்ஹப்கள் நான்கு மட்டுமே” என்று கூறி, இஸ்லாமிய ஞான மரபை ஒரு வரம்புக்குள் அடைத்தனர். ஆனால் அந்தக் கருத்தை மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்கள் கேள்விக்குள்ளாக்கி யதை நாம் மறக்க முடியாது.

ஏனெனில் உலகப் புகழ்பெற்ற கல்வி மையமான ஜாமிஉல்-அஸ்ஹர் பல்கலைக்கழகம் கூட இமாம் ஜஃபர் சாதிக் அவர்களின் ஜஃபரி மத்ஹபை இஸ்லாமிய ஃபிக்ஹ் மரபின் ஒரு அங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு, “மத்ஹப்கள் நான்கு மட்டுமே” என்று கூறிய நிலைப்பாட்டை அஷ்ரப் அவர்கள் சவாலுக்கு உட்படுத்தினார். அந்த கருத்து அப்போது ஆங்கிலப் பத்திரிகைகளில் கூட முக்கிய செய்தியாக வெளிவந்தது.

இன்று இந்த மேடையை விட்டு வெளியேறிய பின் இவ்வாறான கருத்துகளை எங்கு பேச முடியும் என எனக்குத் தெரியவில்லை.

அதனால் தான் இந்த ஆழமான சிந்தையினை துண்டும் இந்த பதிவினை உங்கள் முன் வைக்கிறேன்.

ஆனால் இமாம் செய்யித் அலீ காமெனீ அவர்களின் மறைவிற்குப் பின்னர் இலங்கையில் நாம் என்ன செய்ய வேண்டும், என்ன நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்பதில் ஒரு தெளிவு நமக்கு இருக்க வேண்டும்.

தெற்காசியாவின் பெரிய சிந்தனையாளர்களில் ஒருவரான அபுல் கலாம் ஆசாத் கூட, இஸ்லாமிய புரட்சிகள் தோன்றுவதற்கு பல தசாப்தங்களுக்கு முன்பே பாரசீக நாகரிகத்தைப் பற்றி எழுதினார். “பாரசீகர்களின் அறிவும் கலாசாரமும் என்னை மிகவும் ஆச்சரியப்படுத்துகிறது” என்று அவர் குறிப்பிடுகிறார்.

மௌலானா ரூமி போன்ற ஆன்மீக மகான்களை கொண்டாடிய நாகரிகம் அது. உலக இலக்கியத்தில் உயர்ந்த இடம் பெற்ற கவிஞர்களை உருவாக்கிய மண்ணாக பாரசீகம் விளங்கியது.

அந்த கவிதை மரபின் தொடர்ச்சியாகவே இமாம் அலீ (ரழி) அவர்களின் வம்சத்தில் பல பெரிய அறிஞர்களும் கவிஞர்களும் உருவாகினர்.

இமாம் ஜஃபர் சாதிக் போன்றவர்களும் அந்த அறிவு மரபின் பிரகாசமான நட்சத்திரங்களாக இருந்தனர்.

இந்த மரபின் தொடர்ச்சியாக பல சிந்தனையாளர் களும் கவிஞர்களும் உருவாகினர்.

ஆனால் இன்று நாம் என்ன செய்கிறோம்?

யூத அரசியல் உருவாக்கிய “ஷியா – சுன்னி” என்ற பிரிவினைப் பேணிக்காத்துக் கொண்டே வாழ்கிறோம்.நமது முன்னோர்கள் உருவாக்கி வைத்த சிந்தனைகள், நாகரிக மரபுகள், ஆன்மீக பாரம்பரியங்கள் அனைத்தையும் மறந்து விட்டோம்.

வரலாற்றில் செல்ஜுக்கள், அய்யூபிகள், மம்லூக்கள் போன்ற பேரரசுகள் போராட்டங்களின் நடுவிலும் இப்னு அரபி எனும் பேரறிஞர் ஒரு பெரிய இஸ்லாமிய நாகரிகத்தை கட்டியெழுப்பினார்.

அந்த காலகட்டங்களில் கூட உலகுக்கு ஆன்மீகத்தையும் தத்துவத்தையும் வழங்கிய மகான்கள் தோன்றினர். அவர்களின் கனவு – ஒரு உயர்ந்த இஸ்லாமிய நாகரிகம் உருவாக வேண்டும் என்பதே.

அஷ்ஷஹீத் இமாம் செய்யித் அலீ காமெனீ அவர்களின் எதிர்பார்ப்பு இஸ்லாம் உயிர் வாழ வேண்டும் என்ற ஆழ்ந்த ஈமானியத்தின் வெளிப்பாடு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அந்த கனவை மீண்டும் நினைவுகூர வேண்டிய நேரம் இன்று வந்துள்ளது என்பது எனது ஆழமான பதிவாகும் என்றும் சட்டத்தரணி மர்சூம் மௌலானா தனதுரையில் குறிப்பிட்டார்.

காமேனி ஞாபகார்த்த மன்றத்தின் அழைப்பாளர் அஷ்ஷெய்க் ஹலீம் நன்றி உரை ஆற்றினார்.

நிகழ்ச்சிகளை அஹதியா சம்மேளத்தின் முன்னாள் தலைவர் ஏ.எல்.எம்.அஸ்வர் தொகுத்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது.








தொகுப்பு.இர்ஷாத் ரஹ்மதுல்லாஹ்

# பேருவளையில் மாணவர்களுக்கான “Ramadan Spring – 2026” ஆன்மீக மற்றும் ஆளுமை விருத்தி கற்கைநெறி வெகுவிமரிசையாக நிறைவு!





**(பீ.எம். முக்தார்)**

பேருவளை, மஹகொடை பிரதேச இளைஞர்களின் ஒன்றிணைந்த அமைப்பான “யூத் விங் மஹகொ-ாடை” ஏற்பாடு செய்திருந்த “Ramadan Spring - 2026” ஆன்மீக மற்றும் தலைமைத்துவப் பயிற்சி நெறியின் இறுதிச் சான்றிதழ் வழங்கும் விழா, கடந்த வியாழக்கிழமை பேருவளை ஐ.எல். எம். ஸம்சுதீன் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

சுமார் 60-க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பங்குபற்றிய இக்கற்கை நெறியானது, இளம் தலைமுறையினரிடையே இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களை வளர்ப்பதோடு, அவர்களின் தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு பெப்ரவரி 20 தொடக்கம் மார்ச் 08 வரை செயலமர்வுகளும் இறுதிப் பரீட்சைகளும் இடம் பெற்றது.

இக்கற்கைநெறியில் அடிப்படை இஸ்லாமிய கல்வி, அல்குர்ஆனுடனான சீரான உறவைப் பேணல், ஹதீஸ் மற்றும் துஆக்கள் மனனம், இஸ்லாம-ிய வரலாறு மற்றும் ஆளுமை விரு-த்திப் பயிற்சிகள் , உடல் நலம் எனப் பல்துறை சார்ந்த விடயங்கள் மாண-வர்களுக்குப் போதிக்கப்பட்டன.

யூத் விங் மஹகொடை அமைப்பின் தலைவர் சகோதரர் உஸாமா நவாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், பிரதம அதிதியாக ஜாமிஆ நளீமிய்யாவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் கலாநிதி எம்.ஜே.எம் அரபாத் கரீம் (நளீமி) கலந்துகொண்டு சிறப்பித்தார். அவர் தனது உரையில், “இன்றைய நவீன உலகில் மாணவர்கள் கல்விப் புலமையில் சிறந்து விளங்குவதோடு மாத்திரமன்றி, ஆன்மீக பலமும், சிறந்த ஒழுக்கமும் கொண்டவர்களாக வளர வேண்டும்” என வலியுறுத்தினார்.

கௌரவ விருந்தினராக ஐ.எல்.எம். ஸம்சுதீன் வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திருமதி ரயீஸா அஜ்வாத், விசேட அதிதியாக அஷ்ஷெய்க் எ.ஆர்.எம். ஷரபான் (நளீமி) மற்றும்



பேருவளை நகர சபை உறுப்பினர் அல்ஹாஜ் பயாஸ் அஸ்வர் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியைகளின் இப்தார் நிகழ்வு





**(பாரா தாஹீர்)**

மாவனல்லை பிராந்திய ‘ நிர்மானி குரு சங்கம் “பாலர் பாடசாலை முஸ்லிம் ஆசிரியைகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு நாகூர்கம திவ்மினி மண்டபத்தில் நடைபெற்றது.

இன புரிந்துணர்வை மையமாக கொ-ாண்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் அதிதிகளாக தன்வீர் அகடமியின் விரிவுரையாளர் ஏ.ஆர். எம். ரிஸ்மி நளீமி, பாலர் பாடசாலை அபிவிருத்தி அலுவலகர் ஷம்பா திசாநாயக்க, தன்வீர் அகடமி ஐயாஸ் ரிலாப், திட்ட அலுவலகர் சுவர்ணலதா விக்ரமாராச்சி, பிரதேச அபிவிருத்தி அலுவலகர் சபானா அமீர், அரசாங்க அலுவலர்கள் சுசன்தா தனசிங்க மெனிக்கே, சன்வர்தன அலுவலகர் ஹேவா விதாரன மற்றும் ஊடகவியலாளர் பாரா தாஹீர் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

# விலங்குவழி நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் உயிரிழப்புகளை தவிர்க்க முடியும்

**(அஸ்லம் எஸ். மௌலானா)**

விலங்குவழி நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தடுப்பதன் மூலம் சமூகத்தில் ஏற்படும் தேவையற்ற உயிரிழப்புகளைத் தவிர்க்க முடியும் என சுகாதாரத்துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விலங்குவழித் தொற்று நோய்கள் குறித்து விழிப்புணர்வு செயலமர்விலேயே இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவு மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்றது.

இந்த செயலமர்வில், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

விசர்நாய்க்கடி, எலிக்காய்ச்சல் மற்றும் நிபா வைரஸ் போன்ற நோய்கள் குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது. செல்லப் பிராணிகளுக்கான தடுப்பூசியின் அவசியம் மற்றும் விலங்குகள் கடித்தவுடன் மேற்கொள்ள வேண்டிய முறையான முதலுதவிகள், எலிக் காய்ச்சல் பரவக்கூடிய விவசாயக் குடியேற்றங்கள் மற்றும் தேங்கி நிற்கும் நீர் நிலைகளில் பணிபுரிவோர் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள், வௌவால்கள் கடித்த அசுத்தமான பழங்கள் மூலம் பரவக்கூடிய நிபா வைரஸ் போன்ற ஆபத்துகள் மற்றும் அது குறித்த முன்னெச்சரிக்கைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

மனிதர்களுக்கு ஏற்படும் பெரும்பாலான தொற்று நோய்கள் விலங்குகளிடம் இருந்தே பரவுகின்றன. தற்கால சூழலில் விலங்குகளுக்கும் மனிதர்களுக்குமான தொடர்பு அதிகரித்து வரும் நிலையில் விலங்குவழித் தொற்று நோய்களுக்கான வாய்ப்புகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவை குறித்து அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

# சிறுவர் பூங்கா திறப்பு விழா மற்றும் இப்தார் வைபவம்







**(பீ.எம்.முக்தார்)**

“To wards Smart Humaisara” வேலைத்திட்டதின் அடிப்படையில் 2005 க. பொ. த. (சா.த) பிரிவு பழைய மாணவர்களினால் அமைக்கப் பட்ட சிறுவர் பூங்கா அங்குரார்பன நிகழ்வும் 2005 ஆண்டு க. பொ. த (சா.த) மாணவர்களின் ஒன்று கூடல் மற்றும் இப்தார் நிகழ்வும் பேருவலை, சீனங்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் பாடசாலை அதிபர் பர்ஸான் ஜுனைதீன் அவர்களது தலைமையில் இடம்பெற்றது.

2005 ஆண்டு க. பொ. த (சா.த) கல்வி கற்று காலம்சென்ற அஸ்மத் அக்தாப் மர்சூக், இஷ்ரத் இக்பால், ரிபாஸ் நாஸிர், பஸீஹுல் ரியாஸ் லிஸான் ஆகியோரது பெயரில் சிறுவர் பூங்கா பெயரிடப்பட்டு அதிபர் பர்ஸான் ஜுனைதீனால் திறந்து வைக்கப்பட்டது.

இவ் வைபவத்திற்கு பிரதி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் அல்ஹாஜ் மிஸ்வர் காஸிம் உட்பட உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், 2005 க.பொ.த. (சா/தரத்தில்) கல்வி கற்ற மாணவர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகள் என பலரும் கலந்து கொண்டனர்.



எஸ்.ஏ.சுஃப்யான்
(senior Journalist, Chennai - Tamilnadu, India)



# உலகையே உலுக்கும் மத்திய கிழக்கு போர்

ஈரான் மீதான தாக்குதல் பல கோணங்களில் தற்பொழுது பரிணமித்து வருகின்றது. ஆரம்பத்தில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தினாலும் பின்னர் அமெரிக்கா இணைந்து கொண்டதன் அடுத்து இந்தப் போர் ஒரு பிராந்திய போராக மாறிவிட்டது. மிக முக்கியமாக ஈரான் பல அமெரிக்க படையினரை கைது செய்துள்ளதாக அறிவித்துள்ளமையானது இராணுவ வட்டாரங்களில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த போரின் போது இஸ்ரேலுக்கு மிகவும் பயங்கரமான இழப்பு ஏற்பட்டு இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்ற நிலையில் இஸ்ரேலானது ஈரானின் நீர் நிலைகள் மற்றும் எண்ணெய் நிலைகளை தாக்குவதில் கவனம் எடுத்திருப்பதானது இந்தப் போர் மிகவும் ஆபத்தான கட்டத்துக்கு செல்லும் என்பதை காட்டி நிற்கிறது.

பல தரப்பு மத்தியஸ்த முயற்சிகள் நடைபெற்றாலும் ஈரான் ஒரு நிரந்தரமான தீர்வின்றி யுத்த நிறுத்தத்திற்கு உடன்பட முடியாது என்று தெளிவாக அறிவித்துள்ளது. இதன் காரணமாக இந்த யுத்தம் சில நாட்களுக்கு அல்லது சில மாதங்களுக்கு தொடர்ந்து செல்லக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த யுத்தத்தை பொறுத்தமட்டில் இப்போதைய சூழ்நிலையில்





ஈரான் வளைகுடா நாடுகள் மீது தாக்குதல் நடத்துவதில்லை என்று குறிப்பிட்டாலும் தொடர்ந்து வளைகுடா நாடுகளில் இருந்து ஈரானை நோக்கி தாக்குதல்கள் நடைபெறுவதால் சில நாடுகளை நோக்கி ஈரான் தாக்குதல் நடத்தி வருவதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஈரான் எத்தனை வருடங்கள் என்றாலும் போராடுவதற்கு தயாராக இருப்பதாக ஈரான் இராணுவ தளபதி தெரிவித்திருப்பதுடன் ஒரு முழு அளவிலான அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மீதான ஒரு போராட்டத்தை ஆரம்பிக்க இருப்பதாக ஈரான் அறிவித்துள்ளது. இது எந்த வகையான போராட்டம் என்று இதுவரையில் தெரிவிக்கப்படாவிட்டாலும் இது பரந்துபட்ட ஒரு போராக அமைய வாய்ப்பு இருப்பதாக கணிக்கப்படுகிறது. இந்த சூழ்நிலையில்

இன்று காலை நெதர்லாந்தின் அமெரிக்க தூதரகத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பானது இஸ்ரேல் உடைய போலி தாக்குதலாக அமைந்திருக்கலாம் என்பதே பலரது கருத்தாகவும் உள்ளது. இஸ்ரேலை பொறுத்தமட்டில் சைப்ரஸ் துருக்கி போன்ற நாடுகளுக்கு ஈரான் தாக்குதல் நடத்துவது போன்று போல்ஸ்பிளாக் தாக்குதலை நடாத்தி யுத்தத்தின் கவனத்தை திருப்புவதற்கான ஒரு முழு முயற்சியொன்றை இஸ்ரேல் செயற்படுத்தி வருகிறது. ஆனால் ஈரான் தொடர்ந்தும் நாங்கள் சைப்ரஸ் மீதோ துருக்கி மீதோ தாக்குதல்கள் எவையும் நடத்தவில்லை என்பதை தெளிவாக அறிவித்துள்ள நிலையில் இஸ்ரேல் பல்வேறுபட்ட முயற்சிகளை செய்து வருவதால் உலகளாவிய ரீதியில் அது இவ்வாறான முயற்சிகளை செய்வதற்கு வாய்ப்பு இருப்பதாக இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஐ.அ.இராச்சியத்தில் இருந்து ஈரான் மீதான தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக ஆரம்பத்தில் கருதப்பட்டாலும் ஐ.அ.இராச்சியம் அதனை மறுத்துள்ளது.

ஆனால் ஈரான் ஐ.அ.இராச்சியத்தில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டிருந்தால் கட்டாயம் அதற்கு பலமான பதிலடி கொடுக்கப்படும் என்று அறிவித்திருப்பதானது தற்செயலாக ஐ.அ.இராச்சியம் இந்தப் போராட்டத்தில் இணையுமாக இருந்தால் அது நிச்சயமாக பல ஆசிய நாடுகளையும் பாதிக்கக்கூடிய அளவுக்கு உலகளாவிய ஸ்தம்பித்த நிலையை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது மத்திய கிழக்கின் அதிகமான வான் பரப்புகள் மூடப்பட்டு இருப்பதால் பல அசௌகரியங்களை எதிர் நோக்கி இருப்பதோடு ஹோமூஸ் ஜலசந்தி அதே போன்று செங்கடல் ஊடாக பயணிக்கும் போர்க்கப்பல்கள் மற்றும் எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களும் பலத்த சவால்களை எதிர்நோக்குகின்றன. இதனால் உலக அளவில் மசகு எண்ணெய்யின் விலை பெருமளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது மசகு எண்ணெய் மற்றும் இயற்கை வாயு என்பவற்றின் விலை ஐரோப்பிய சந்தையில் பெருமளவு அதிகரித்து வருகின்ற அதேவேளை ஆசிய நாடுகளான பாகிஸ்தானிலும் இயற்கை வாயு மற்றும் பெட்ரோலிய பொருட்களின் விலையும் பெருமளவு அதிகரித்துள்ளது. இந்த சூழ்நிலை இலங்கை போன்ற வளர்முக நாடுகளையும் பெருமளவில் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை தென் லெபனானில் இருந்து இஸ்ரேல் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் பெருமளவுக்கு அதிகரித்து வருகின்றன. இஸ்ரேல் இந்த தாக்குதல்களில் பலத்த இழப்புகளை எதிர்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. லெபனான் ஹிஸ்புல்லா போராளிகள் ஒரு புதுவிதமான ஆயுதத்தை பயன்படுத்துவதாகவும் இதனால் இஸ்ரேலிய தாங்கிகளும் ஜீப்புகளும் பெருமளவில் அழிவுக்கு உட்படுத்தப்பட்டு இருப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஹிஸ்புல்லாக்கள் தென் லெபனானின் பல கிராமங்களில் இருந்து இஸ்ரேலிய விசேட அதிரடி ராணுவத்தை கொலாணி பிரிவை விரட்டி அடித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் போது இஸ்ரேல் மேலிருந்தும் ஈரானில் இருந்தும் நடைபெறும் பலஸ்டிக் ஏவுகணை தாக்குதலுக்கு மேலதிகமாக ஹிஸ்புல்லாக்களும் ரொக்கட் தாக்குதல்களை தொடர்ந்தும் நடத்தி வருகின்ற அதே வேளை சில வட இஸ்ரேலிய கிராமங்களில் இருந்து அவசரமாக பொது மக்களை வெளியேறுமாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் போர் இன்னும் சில வாரங்களுக்கு தொடருமாக இருந்தால் உலகளாவிய அவசர நிலையை பிரகடனப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்பது பலரது கருத்தாகும். அவ்வாறு உலகளாவிய அவசர நிலையை பிரகடனப்படுத்தப்படுமாக இருந்தால் இன்னும் பல நாடுகள் இந்த போரில் இணைவதற்கும் இந்தப் போர் கட்டுக்கடங்காத ஒரு நிலையை அடைய வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது.

# புல்மோட்டை நிலையத்திற்கான "பியூச்சர் லீடர்ஸ்" சான்றிதழ்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு






அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சமூக, கலாச்சார கல்விப் பிரிவின் ஏற்பாட்டில், புனித ரமலான் மாதத்தை முன்னிட்டு இளைஞர்களுக்கு நேர்வழிகாட்டும் "பியூச்சர் லீடர்ஸ்" திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட "இஸ்லாமிய வாழ்க்கைப் பாடம்" 7 நாள் பயிற்சி வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டை நிலையத்தில் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட் கிழமை (09) புல்மோட்டை அன்வாருல் உலூம் அரபிக் கல்லூரியில் , முன்னாள் தவிசாளர் ஆதம்பாவா தௌபீக் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ரிஷான் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கலந்து கொண்டதுடன், அதிதிகளாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளரும், உயர்பீட உறுப்பினருமான ஹில்மி முஹைதீன் பாவா, கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் அஸ்மி, கிண்ணியா நகரசபை உபதவிசாளர் அஸீஸ் அதிபர், ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் கட்சியின் குச்சவெளி பிரதேசசபை, கிண்ணியா நகரசபை மற்றும் கிண்ணியா பிரதேச சபை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் மாவட்டக் குழு செயலாளர் அனீஸ், கட்சியின் முக்கியஸ்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

ரமலான் காலத்தில் இளைஞர்களின் இஸ்லாமிய நெறி, சமூகப் பொறுப்பு மற்றும் தலைமைத்துவ திறன்களை மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இத்திட்டம், சுமார் 1000 மாணவர்களுக்கு பயனடைந்துள்ளதுடன். 20க்கும் மேற்பட்ட நிலையங்களில், 35க்கும் மேற்பட்ட திறமையான வளவாளர்களின் பங்களிப்புடன், ஒரே பாடத்திட்டத்தின் கீழ் இப்பயிற்சி திட்டம், கட்சியின் கல்விப்பிரிவினால் ஒழுங்குபடுத்தப் பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## பெருக்குவட்டான் அல் மின்ஹாஜ் அஹதிய்யா மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு




**(சியாஜ்)**

பெருக்குவட்டான் அல் மின்ஹாஜ் அஹதிய்யா பாடசாலையில் இடம்பெற்ற முஸாபகத்துர் ரமலான் போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் அல் மின்ஹாஜ் அஹதிய்யாவின் அதிபர் மௌலவியா ஏ.டி பஷிலா பேஹம் தலைமையில் இடம்பெற்றது.

பெருக்குவட்டான் அல் மின்ஹாஜ் முஸ்லிம் பாடசாலையில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் புத்தளம் மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்தின் செயலாளர் பாஷரூக் பதீன், அல் - மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் ஓய்வு பெற்ற ஏ. சீ. நஜிமுதீன் மற்றும் ஆலீம்கள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## ஊடகவியலாளர்களுக்காக அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற இப்தார் நிகழ்வு







ஊடகவியலாளர்களின் பங்கேற்புடன் இப்தார் நிகழ்வு (12) அரசாங்க தகவல் திணைக்கள வளாகத்தில் நடைபெற்றது. சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதான உரையை சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் மொஹமட் முனீர் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் வெகுசன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌஷல்யா ஆரியரத்ன, வலுசக்தி பிரதி அமைச்சர் முஹம்மது இல்யாஸ் முஹம்மது அர்கம், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரியாஸ் பாரூக் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## கொழும்பு மாநகர சபையில் இப்தார் நிகழ்ச்சி!






புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு, கொழும்பு மாநகர சபையினால் (CMC) ஏற்பாடு செய்யப்பட்ட விசேட இப்தார் (நோன்பு திறக்கும்) நிகழ்ச்சி, கொழும்பு மாநகர சபை மண்டபத்தில் மிகச் சிறப்பாக அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கொழும்பு மாநகர முதல்வர் (Mayor), பிரதி முதல்வர் (Deputy Mayor) மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கலந்துகொண்டனர்.

மத நல்லிணக்கத்தையும் சக வாழ்வையும் வலியுறுத்தும் வகையில் இந்த இப்தார் சந்திப்பு அமைந்திருந்தது.

கொழும்பு மாநகர சபையின் முஸ்லிம் உறுப்பினர்களின் ஒன்றியம் (CMC Muslim. Member Forum) இந்த நிகழ்ச்சியினை மிகவும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் ஏற்பாடு செய்திருந்தது. இதில் பல்வேறு மதத் தலைவர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.


**(தகவல் - கலீலிர் ரஹ்மான்)**




அனுராதபுரம் சாஹிரா கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பாடசாலை குழாம் இணைந்து ஏற்பாடு செய்திருந்த நல்லிணக்க இப்தார் நிகழ்வு பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம்.

**(படம்:- எம்.ரீ. ஆரிப் )**

# ஓங்கும் ஈரானின் கரம் நெருக்கடியில் உலகப் பொருளாதாரம்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

ஈரான் இஸ்ரேலிடையேயான தாக்குதலகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு 14 நாட்கள் கடந்துள்ள நிலையில் மத்திய கிழக்கில் போர் பதற்றத்துடன் தொடர்ச்சியாக அபாயகரமான ஏவுகனைக்களை கொண்டு நடைபெறும் கொடூரமான அழிவுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறான போர்கள், சர்வதேச சட்டங்களை மீறிய நில ஆக்கிரமிப்புக் களை தடுத்து நிறுத்தி உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக 1948 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஐ.நா. சபையாலும் எதையும் செய்ய முடியாத அளவிற்கு திராணியற்றதாக காணப்படுகின்றது. அந்தளவிற்கு உலகில் இஸ்ரேலினதும் அமெரிக்கா வினதும் எல்லை மீறும் ஆக்கிரமிப்புக் களும் அத்துமீறல்களும் தொடர்கின்றன. இந்நிலை யில் 2026.02.28 ஆம் திகதி ஈரான் மீது நடத்திய தாக்குதலின் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஈரான் மக்களுக்கு விடுத்த அரசியல் மாற்றத்திற்காக தற்போதைய ஆட்சிக்கு எதிராக கிளர்ந்து எழுங்கள் என்ற வேண்டுகோளை அந்நாட்டு மக்கள் ஒரு தூசுக்கும் கணக்கில் எடுக்கவில்லை. அமெரிக்க புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் ஈரானில் ஆட்சி கவிழ்ப்பு சாத்தியமில்லை. அந்த நாட்டு அரசு ஸ்தீரமான நிலையில் இருக்கின்றது என்று அமெரிக்க புலனாய்வு தகவல்கள் தெரிவித்திருப்பதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான ஒரு நிலையில் அமெரிக்க மற்றும் இஸ்ரேலின் கூட்டு தாக்குதலில் கொல்லப்பட்ட ஈரானின் ஆயுள்கால உயர் தலைவர் (ஆன்மீக) கொமெய்னிக்கு பதிலாக அவரது மகனான மொஜ்தபா கொமெய்னி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அதன் மூலம் அங்கு மக்களை தூண்டி அந்நாட்டு அரசுக்கு எதிராக கொதிப்படைய செய்ய முடியும் என்ற அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் எதிர்பார்ப்பும் முயற்சியும் சுக்கு நூறாகி இருக்கின்றது. அமெரிக்காவில் வசித்து வருகின்ற ஈரானின் முன்னாள் ஆட்சியாளராக இருந்து துரத்தியடிக்கப்பட்ட மன்னர் சா வின் புதல்வரை ஈரானில் ஆட்சி பீடம் ஏற்றலாம் என்ற ட்ரம்பின் திட்டமும் தவிடுபொடியாகி இருக்கின்றது.



அதே நேரம் போரை நிறுத்தலாம் என்று ட்ரம்ப் செய்த அறிவிப்புக்கு பதிலடியாக போரை நிறுத்துவது நீங்கள் அல்ல நா-ங்களே என்று ஈரான் பதிலடி எசர்சரிக்கை விடுத்திருப்பதாக சர்வதேச அறிவிப்பு-க்கள் கூறுகின்றன. போரை ஆரம்பி-த்தது நீங்கள். முடித்து வைக்க வேண்-டியது நாங்களே என்று ஈரானின் புதிய ஆன்மீக தலைவர் அமெரிக்காவுக்கு அறைகூவல் விடுத்துள்ளார். எபிக் பியுரி (ழுிநசயவழைெ நிுைஉ குரசல) என்ற அமெரிக்க இஸ்ரேல் தாக்குதல் நடவடி-க்கைக்கு திடகாத்திரமான முறையில் ஈரானும் பதிலடி கொடுத்து வருகின்றது. இந்த பதிலடியில் முக்கியமான போர் வியூகமான அமைந்திருப்பது ஈரான் தனது அயல் அரபு நாடுகள் சிலவற்றின் மீது மேற்கொண்டு வரும் ஏவுகணைத் தாக்குதலாகும். சவுதி அரேபியா, கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகள் மீது ஈரான் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது. இந்த நாடுகள் அமெரிக்க படைகளை நிலை நிறுத்த அமெரிக்கா வுக்கு உதவி செய்து கொண்டிருப்பதால் அமெரிக்காவின் அடிவருடிகள் என்ற அடிப்படையில் இவ்வாறு தாக்கி அந்த நாடுகளில் நெருக்கடியை ஏற்படுத்தினால் அமெரிக்காவின் கொட்டத்தை மத்திய கிழக்கில் ஒழித்துக் கட்டலாம் என்ற போர் தந்திரோபாயத்தின் அடிப்படையில் தாக்கி வருகின்றது.



அமெரிக்காவின் கடற்படை மற்றும் விமானப்படை தளங்கள் மத்திய கிழக்கில் எட்டு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. பஹ்ரைன், எகிப்து, ஈராக், ஜோர்தான், குவைத், கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளின் எல்லைகளுக்குள் இத்தகைய தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அமெரிக்காவின் தளங்களில் குறிப்பாக ஐக்கிய அரபு இராச்சியத்திற்குள் 40,000 முதல் 50,000 அமெரிக்க துருப்பினர் உள்ளனர். கட்டாரில் விமானப்படை தளத்தில் 10,000 படையினர் உள்ளனர். அத்துடன் இப்பிராந்திய கடல் பரப்பில் ஆபிரஹாம் லிங்கன் மற்றும் USS Jerald ஆகிய போர்க்கப்பலும், 130 தாக்குதல் விமானங்களும் நிலை கொண்டுள்ளன. எந்த நேரத்திலும் ஈரானை சுற்றி வளைத்து தாக்கி அழிப்பது என்ற இலட்சியதில் அவை உள்ளன. அதனால் ஈரான் இத்தகைய நாடுகளில் உள்ள அமெரிக்க தளங்கள் மீது தாக்குதலை நடத்தி அமெரிக்க படைகளை துரத்தி அடித்தால் ஈரானுக்கு ஆபத்தில்லை என்ற நிலையில் இந்த போரில் ஈரான் செயற்பட்டு வருகின்றது. அத்துடன் ஈரானில் எண்ணெய் வளங்களை அழிக்க நினைத்தால் ஏனைய எட்டு மத்திய கிழக்கு நாடுகளிலும் எண்ணெய் வளம் மற்றும் எரிவாயு (கேஸ்) இருக்காது என்றும் ஈரான் எச்சரிக்கை விடுத்திருக்கின்றது. அதனால் ஈரானை சூழ இருக்கின்ற மத்திய கிழக்கு நாடுகளும் இந்த போரில் பலவந்தமாக இழுத்து போடப்பட்டுள்ள நிலையில் பாரிய இழப்புக்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன. பதிலடியாக இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதலை துரிதப்படுத்தி இருக்கின்றது. அங்கிருந்து இயங்கி வருகின்ற ஈரான் ஆதரவு ஹிஸ் புல்லாக்களையும் அவர்களின் நிலைகளையும் அழித்து மத்திய கிழக்கை இஸ்ரேலுக்கு பாதுகாப்பான பிரதேசமாக மாற்றும் திட்டமே இதுவாகும். அதே நேரம் ஈரான் இந்த போரை நிறுத்தி இஸ்ரேல் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டுமானால் மூன்று முக்கிய நிபந்தனைகளுக்கு அமெரிக்க அடிபணிய வேண்டும் என்ற அறிவிப்பையும் செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. முதலாவது நிபந்தனை ஈரான் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடை நீக்கப்பட வேண்டும். இரண்டாவது நிபந்தனை மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அமெரிக்க படைகள் மற்றும் இராணுவ தளங்கள் வாபஸ் பெறப்பட வேண்டும். மூன்றாவது நிபந்தனை பாலஸ்தீனம் சுதந்திர நாடாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதாகும். இப்படிப்பட்ட ஒரு நிலையில் ஈரான் ஹோமூஸ் (ஜல சந்தி) கால்வாயை மூடி கப்பல் போக்குவரத்து தடையை ஏற்படுத்தி இருக்கின்றது. அத்துடன் அமெரிக்காவின் உதவியுடன் கால் வாயை கடக்க முயற்சி செய்த தாய்லாந்து நாட்டு கப்பல் ஒன்றின் மீது தாக்குதலை நடத்தி மூழ்கடித்திருக்கின்றது. அத்துடன் கடல் கண்ணிவெடிகளை புதைத்து கப்பல்கள் போக முடியாதபடி தடையை ஏற்படுத்தி இருக்கின்றது. ஆனாலும் இத்தகைய ஈரானின் கண்ணிவெடி போடும் 10 கப்பல்களை தாக்கி அழித்ததாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூறி இருக்கின்றார். ஆனாலும் அதுபற்றி வெள்ளை மாளிகை தெரிவிக்கையில் 16 கப்பல்களை தாக்கி அழித்துவிட்டதாக அறிவித்தல் செய்திருக்கின்றது. இருந்தாலும் இத்தகைய முன்னு க்கு பின் முரணான தகவல்கள் அமெரிக்கா உலகிற்கு பொய்யை மூட்டை மூட்டையாக அறிவிக்கின்றது என்பதை நிரூபணம் செய்கின்றது. அது தொடர்பாக அமெரிக்க அதிகாரி ஒருவரால் எக்ஸ் தளத்தில் போடப்பட்டிருந்த செய்தியும் நீக்கிக்கொள்ளப் பட்டிருக்கி ன்றது. உலகில் அதிகமான ஊடகங்களும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் சார்பான ஊடக அறிக்கைகளை மூலாதாரங்க ளாகக் கொண்டே செய்திகள் மற்றும் இந்த போர் நிலவரம் தொடர்பான செய்திகளை வழங்கி வருகின்றன. இந்நிலையில் ஹோர்மூஸ் கால்வாய் ஊடாக கப்பல்கள் போக முடியாததால் தற்போது உலக சந்தையில் எண்ணெய் விலை பீப்பா ஒன்றிற்கு 150 வரை உயரும் அறிகுறிகள் தென்படுகின்றன. இதன் தாக்கம் எமது நாடான இலங்கையிலும் உணரப்பட்டிருக்கின்றது. அண்மையில் எண்ணெய் விலைகள் அதிகரிக்கப்பட்டன. அதற்கடுத்ததாக எரிவாயு விலையும் உயரும் நிலை ஏற்பட்டிருப்பதோடு உள்நா ட்டில் பல துறைகளிலான விலை உயர்வுகள் ஏற்பட இருக்கின்றன. இப்படியானதொரு நிலையில் ஈரான், ஐ.நா. செயலாளர் நாயகத்தையும் பாதுகாப்பு சபையையும் கடுமையாக சாடி இருக்கின்றது. ஈரானில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு ஆக்கிரமிப்பாளர் களதும் அத்துமீறிய ஆக்கிரமிப்பு காரணமாக இரத்த ஆறு ஓடுவதை தடுத்து நிறுத்த எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஐ.நா. அதன் பாதுகாப்பு சபையை கூட்டி இத்தகைய தாக்குதல்களுக்கு எதிராக குரல் எழுப்பவோ அல்லது போரை தடுத்து நிறுத்தவோ முயற்சி எடுக்கவில்லை. இன்று ஈரான் போன்றே நாளை இறைமை, தன்னாதிக்கம் கொண்ட எந்த நாட்டையும் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் இரையாக்கலாம் என்றும் ஈரான் தெரிவித்திருக்கின்றது. அதே நேரம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ஈரானுக்கு எதிராகவே தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இருக்கின்றது. ஈரானை அத்துமீறி தாக்கி ஆக்கிரமிப்பு செய்யும் இஸ்ரேலையும் அமெரிக்கா வையும் அண்மையில் கூடிய பாதுகாப்பு கவுன்சில் கண்டிக்கவில்லை.

இந்நிலையில் தற்போதைய போர் நிலைமை மேலும் மோசமடையுமானால் அதன் எதிரொலியாக உலகின் பல நாடுகளில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவதை தடுக்க முடியாது போகலாம். அதற்கு பிரதான காரணமாக அமைவது கடல் வழிப் போக்குவரத்திலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கான ஆகாய மார்க்க போக்கு வரத்திலும் ஏற்பட்டுள்ள தடைகளாகும். எரிபொருள் தட்டுப்பாடு, விலை ஏற்றம் காரணமாகவே பாரிய நெருக்கடி ஏற்பட இடமிருக்கின்றன. அத்துடன் மத்திய கிழக்கு நாடுகளுக்கான விமானப் போக்குவரத்து ஸ்தம்பிதம் காரணமாக உல்லாசப் பிரயாணத்துறை மற்றும் அனைத்துவிதமான அந்நிய செலாவணி வருமான வழிகளும் பாதிக்கப்படுமிடத்து பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி வரலாம். அத்துடன் இலங்கையில் தற்போது எரிபொருள் நெருக்கடி ஒன்று இல்லை என்று அரசு சொன்னாலும் தற்காப்புக்காக என்று எரிபொருள் விநியோகத்தை கட்டுப்படுத்தும் வகையில் 2026.03.15 ஆம் திகதி முதல் கியு. ஆர் முறையை அரசு மீண்டும் அறிமுகம் செய்திருக்கி ன்றது. அத்துடன் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியைப் போன்று எரிபொருள் நெருக்கடி வருமானால் மீண்டும் வீட்டில் இருந்து வேலை செய்வது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும் அறிய முடிகின்றது.




எவ்வாறாயினும் எந்த பிராந்தியமாக இருந்தாலும் இவ்வாறான அத்து மீறல்கள் மனித குலத்திற்கான நாசத்தை ஏற்படுத்தக் கூடியவைகளாகும். ஆனாலும் அரபுலகத்தை பொறுத்த வரையில் இவ்வாறான ஆக்கிரமிப்பு க்களும் போர்களும் புதியவைகள் அல்ல. உலக வரலாற்றை புரட்டினால் இது போன்ற நிறைய யுத்தங்களும் மோதல்களும் இடம்பெற்றுள்ளன. ஆனாலும் அரபு நாடுகள் அவற்றிடம் இருக்கின்ற எண்ணெய் வளம் மற்றும் செல்வச் செழிப்பு காரணமாக எப்படியோ மீண்டெழுகின்றன. அத்தகைய நாடுகளின் மக்களும் அந்த பிரதேசத்திற்குரிய திடகாத்திரமான மன உறுதியும் தன்னம்பிக்கையும் கொண்ட வர்களாக உள்ளனர். ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான், உட்பட பல நாடுகளில் வாழும் மக்கள் இதுபோன்ற நிலைமைகளை அனுபவித்தமக்கள்வர். எவ்வாறாயினும் இவ்வாறான யுத்தங்களால் பாதிக்கப்பட்டு பொருளாதார நலிவை சந்திக்கும் நாடுகளுக்கு அமெரிக்காவோ இஸ்ரேலோ நஷ்டஈடு வழங்குவதில்லை. அதனால் தொடரும் போர் நிறுத்தப்பட்டு நிலையான சமாதானத்திற்கான வழி பிறக்க வேண்டும். அழிவுகளுக்கும் நாசத்திற்கும் விரைவில் முடிவு கட்டப்பட வேண்டும் என்பதே பிராந்திய மக்களது எதிர்பார்ப்பாகும்.

# கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்கிலின் வருடாந்த இப்தார் மற்றும் ஹிஸ்புல் குர்ஆன் தமாம் நிகழ்வு












கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்கில் (Muslim Ladies Study Circle) நிறுவனத்தின் ஏற்பாட்டில் புனித ரமலான் மாதத்தை முன்னிட்டு வருடாந்த இப்தார் மற்றும் ஹிஸ்புல் குர்ஆன் தமாம் மஜ்லிஸ் நிகழ்வுகள் நேற்றைய தினம் (15) மிகச் சிறப்பாக நடைபெற்றது. கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்கில் கட்டிடத்திலுள்ள "ஹாஜியானி சுபைதா எம். அப்துல் கரீம் நினைவு மண்டபத்தில்" அதன் தலைவரும், இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளரும், சியனே ஊடக வட்டத்தின் தலைவருமான அல்ஹாஜ் அஹ்மத் முனவ்வர் தலைமையில் மேற்படி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு சவூதி டிரேட்ஸ் ரூ டிரான்ஸ்போர்ட் நிறுவனத் தலைவர் அல்ஹாஜ் M.A.M. அஷ்ரப் பங்கேற்றார்.

மேலும் சிறப்பு அதிதிகளாக அல்ஹாஜ் A.M.J.M. ஜவ்பர் (முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர்), அல்ஹாஜ் யு.சு. முத்தஸிர் (பிரதேச சபை உறுப்பினர்), திரு. ஐ.யு. கலீலூர் ரஹ்மான் (கொழும்பு மாநகர சபை உறுப்பினர்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் முன்னாள் வக்ப் சபை உறுப்பினர் மௌலவி இஜ்லான் (காசிமி), தமிழ்நாட்டை சேர்ந்த மார்க்க அறிஞர் முஸ்தபா மஸ்லஹி, பிராண்டியாவத்தை பள்ளிவாசல் கதீப் ஆகியோர் மார்க்க சொற்பொழிவுகளை நிகழ்த்தியதுடன், அகில இலங்கை ஸூபி ஆன்மீகப் பேரவையின் தலைவர் மௌலவி அப்துல்லாஹ் நூரி அவர்கள் துஆப் பிரார்த்தனை நிகழ்த்தினார்.

மேலும் மாணவிகளின் குர்ஆன் ஓதல் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றதுடன் அவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டமை விஷேட அம்சமாகும்.



கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்கில் அமைப்பின் தலைவர் அல்ஹாஜ் ஆ.ணு. அஹ்மத் முனவ்வர் மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முன்னாள் தேர்தல் ஆணையாளர் நாயகம் எம்.எம்.மொஹமட், கொழும்பில் இருந்து வருகை தந்த பல்துறைசார் பிரமுகர்கள் உட்பட பிரதேச உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர்கள், வர்த்தக பிரமுகர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள், தாய்மார்கள், மாணவர்கள் உட்பட சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.







---




**பயாஸா பாஸில்**

# ரமழானில் பெற்ற பயிற்சியை தொடர்வது எப்படி?

ரமழான் என்பது வெறும் ஒரு மாதம் மட்டுமல்ல. ஏனைய அனைத்து மாதங்களை விடவும் சிறப்பானது. அது ஒரு ஆன்மீகப் பயிற்சி பள்ளி போன்றது. அந்த ஒரு மாதத்தில் நாம் கற்றுக் கொண்ட நல்ல பழக்கங்களை, ரமழான் முடிந்த பின் தொடர்வதே உண்மையான வெற்றி.

அதை எப்படி தொடரலாம்?

**1. தொழுகையை சீரானதாக மாற்றிக்கொள்ள முடியும்.**

ரமழானில் பள்ளிவாசலிலும் வீட்டிலும் தொழுகைகளை அந்தந்த குறித்த நேரத்தில் செய்தோம். அதுபோலவே ரமழான் முடிந்த பின்பும் ஐந்து வேளை தொழுகையை தவறாமல் செய்ய முயற்சிக்க வேண்டும். முடிந்தவரை ஆண்கள் ஜமாஅத்தாக தொழ வேண்டும். ஐவேளை தொழுகை மட்டுமல்ல.. சுன்னத்தான , நபிலான தொழுகைகளையும் விடாது நிறைவேற்ற வேண்டும்.

**2. குர்ஆன் ஓதுவதைக் தொடருதல்.**

ரமழானில் தினமும் குர்ஆன் ஓதினோம். அதனை நிறுத்தாமல் ஒரு நாள் ஒரு பக்கம் என்றாலும் தொடர்ந்து ஓதுங்கள். ஐவேளை தொழுகைகளின் பின்னர் குர்ஆன் ஓதவும் நேரமொதுக்குங்கள்.

**3. ஸுன்னத்தான நோன்புகள்**

ரமழான் முடிந்த பின்
ஷவ்வால் மாதத்தில் 6 நோன்புகள்
அதேபோல்,
திங்கட் கிழமையும் வியாழக் கிழமையும் ,
மாதத்தில் மூன்று நோன்பு போன்ற நோன்புகளை முயற்சிக்கலாம்.

**4. தானம் மற்றும் உதவி**

ரமழானில் நாம் அதிகமாக சதகா மற்றும் உதவி செய்தோம். அந்த மனதை இழக்காமல் சிறிதளவு என்றாலும் தொடர்ந்து உதவி செய்யலாம். நாம் சிறியதாக செய்தாலும் அதன் பலன் எமக்கு எதிர்பாரா நேரத்தில் பல மடங்காக வந்து சேரும்..

**5. நற்குணங்கள்**

கோபத்தை கட்டுப்படுத்தல், நல்ல வார்த்தைகள் பேசுதல், பொறுமை , சகிப்பு போன்ற குணங்களை ரமழானில் வளர்த்தோம். அவை வாழ்க்கை முழுவதும் தொடர வேண்டும்.

**6. சிறிய இலக்குகள் அமைத்துக் கொள்ளுதல்**

ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் செய்ய முடியாமல் போகும். ஆனால்
தினமும் சில திக்ருகள் சில நிமிடம் துஆ சிறிய நல்ல செயல்கள் என்று சிறிய இலக்குகளை அமைத்தால் தொடர்ந்து செய்வது எளிதாகும்.
பெரிதாக செய்யாவிட்டாலும், சிறிய பயிற்சியை தொடர்ந்து செய்வதன் மூலம் சிறந்த உடல் உள ஆரோக்கியத்தை பெறலாம்.

எனவே....,
ரமழான் நம்மை மாற்றுவதற்காக வந்தது.
அந்த மாற்றம் ஒரு மாதம் மட்டுமல்ல,
வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டும்.
ரமழானின் உண்மையான வெற்றி,




ரமழான் முடிந்த பிறகும் நாம் அல்லாஹ்விற்கு நெருக்கமாக இருப்பதில்தான் உள்ளது.
ரமழானை கொண்டு பெற்ற பயிற்சிகளை வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தி பலன் பெறுவோமாக...!!

**பயாஸா பாஸில்**

# ஜனாதிபதி மாளிகையில் இப்தார் நிகழ்வு

# ஜனாதிபதி அமைச்சர்கள் பங்கேற்பு









முஸ்லிம்களின் நாளாந்த ரமலான் நோன்பு நிறைவைக் குறிக்கும் வகையில், நேற்று (18) பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கலந்துகொண்டார்.

இஸ்லாமிய மதத் தலைவர்கள், அமைச்சர்கள், இராஜதந்திரிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டதுடன், மத வழிபாடுகளுக்கு முன்னுரிமை அளித்து நிகழ்வு நடைபெற்றது.

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி இதன்போது வரவேற்புரை நிகழ்த்தியதுடன் சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் முனீர் முழப்பர் இங்கு உரையாற்றினார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்களுடன் ஜனாதிபதி சுமுகமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவன் ரணசிங்க, வலுசக்தி பிரதி அமைச்சர் அர்கம் இல்யாஸ் ஆகியோருடன் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப், கொழும்பு மேயர் வ்ராய் கெலி பல்தசார், அரச அதிகாரிகள், உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள் உள்ளிட்ட அதிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.











# ஐ.ரீ.என் நிறுவனத்தில் இப்தார் நிகழ்வு







(அஷ்ரப் ஏ சமத்)

சுயாதீன தொலைக்காட்சி மற்றும் வசந்தம் தொலைக்காட்சி வானொலி முஸ்லிம் ஊழியர்கள் இணைந்து வருடாந்த இப்தார் நிகழ்வினை ஐ.ரீ.என் தலைவர் பிரியந்த வெதமுல்ல தலைமையில் ஐ.ரீ.என். கெம்பஸ் கூட்ட மண்டபத்தில் 17.03.2026 நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு வெளிநாட்டு பிரதியமைச்சர் அருன கேமசந்திர, புத்தளம் பாராளுமன்ற உறுப்பிணர் எம். பைசால், பலஸ்தீன் நாட்டின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள பைசர் பாருக், மற்றும் பொதுமுகாமையாளர் பிரதிப் பொதுமுகாமையாளர், மற்றும் ரம்மிய லங்கா நிறுவனர் அப்துல் ரஹ்மான் நளிமி ஜெயவர்த்தன கம ஜூம்ஆப் பள்ளிவாசல்கள் இமாம். மற்றும் பள்ளி பரிபலான சபை உறுப்பிணர்கள் ஐ.ரீ.என் தமிழ், பௌத்த ஊழியர்கள் 300க்கும் மேற்பட்டோர்கள் இவ் இப்தார் இராப்போசன விருந்திலும் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை வசந்தம் முகாமையாளர் மொஹமட் இர்பான் மற்றும் பர்ஹான் உட்பட அனைத்து ஊழியர்கள் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யுத்த தீப்பிழம்புகள் அணைந்து அமைதியின் ஒளி உதயமாகட்டும்

## எதிர்கட்சித் தலைவரின் நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தி

உலகெங்குமுள்ள முஸ்லிம்கள் ரமழான் மாத நோன்பை நிறைவு செய்யும் இந்த தருணத்தில், இஸ்லாம் நமக்கு கற்றுத் தரும் மானுட தர்மங்களை இன்னும் ஆழமாக சிந்திப்பது அவசியமாகும். ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டிய ஐந்து கடமைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அவையாவன: நம்பிக்கை, ஐவேளை தொழுகை, ரமழான் மாத நோன்பு, ஸகாத் அதாவது ஏழை வரி செலுத்துதல் மற்றும் ஹஜ் யாத்திரை ஆகியனவாகும். இந்த ஐந்து கடமைகளிலும் முஸ்லிம்களுக்கு சுட்டிக்காட்டப்படுவது, ரமழான் மாதத்தில் முஸ்லிம்கள் கடைப் பிடிக்கும் நோன்பு, அர்ப்பணிப்பு, பொறுமை மற்றும் ஆன்மீகத் தூய்மை பற்றிய பல பாடங்களை கற்றுத் தருகிறது.

இந்தத் தருணத்தில் பெரும்பான்மையான முஸ்லிம்கள் வாழும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தோன்றியுள்ள போர்ச் சூழலுக்கு தீர்வு காண்பதற்கான முக்கியமான வழி, இஸ்லாம் காட்டும் பொறுமை, கருணை, ஒற்றுமை மற்றும் மனிதநேயமே என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரு மோதலை தீர்ப்பதற்கு வலிமை அல்லது சட்டம் மட்டும் போதாது. அதற்கு மக்களின் சிந்தனையை உறுதியான நல்வழியில் கொண்டுசெல்வது முக்கிய மாகும். ரமழான் மாதத்தில் முஸ்லிம்கள் காட்டுவது, தம் மனதிற்குள் கட்டியெழுப்பும் வலிமையே ஆகும். இந்த தருணத்தில் உண்மையான ரமழான் கொண்டாட்டமாக நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது அதுவே.

அத்தகைய மனித சிந்தனைகள் மேலும் நல்ல, சமாதானமான மற்றும் சமூக



நீதிக்கு அர்ப்பணிக்கப்படும் ஒரு தருண த்திற்கு உலகில் மாற்றம் நிகழட்டும் என்று நாம் இந்த நேரத்தில் பிரார்த்திப்போம். அத்தகைய சிந்தனைகள் உலக மக்களின் மனங்களில் ஒளிர்ந்தால், போரின் தீப்பொறிகள் அணைந்து, அமைதியின் விளக்குகள் உலகெங்கும் ஏற்றப்படுவதில் சந்தேகமேயில்லை. உலக மக்கள் அனைவருக்கும் மற்றும் இலங்கையில் வாழும் அனைத்து முஸ்லிம்களுக்கும் இனிய ஈதுல் பித்ர் நோன்புப் பொருநாள் நல்வாழ்த்துகள்.

# அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார் ஆசிரியர் வசீம்

நீர்கொழும்பு போறதோட்ட அல்-பலாஹ் கல்லூரியின் உதவி அதிபரும், கணித பாட ஆசிரியருமான ஏ.பி. வசீம் கடந்த 13ஆம் திகதி அகில இலங்கை சமாதான நீதவானாக சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

15 வருட ஆசிரியர் சேவையில் மாணவர்களுக்கு சிறந்த கல்வியினையும், ஆலோசனை களையும், வழிகாட்டல் களையும் வழங்கி மாணவர்களின் மனதை கவர்ந்த ஒரு சிறந்த ஆசிரியராவார்.

இவர் சமூக சேவையாளர் சமூகத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையவரா கவும், சிறந்த ஆளுமை மிக்கவராகவும், எல்லோரோடும் நன்றாக பழகக் கூடியவராகவும் மனிதாபிமானமிக்க



வராகவும் திகழ்கின்றமை குறிப்பிடத் தக்கது.

# கொழும்பு டைம்ஸ் ஏற்பாடு செய்த இஃப்தார் நிகழ்வு





(ஏ.எஸ்.எம். ஜாவித் )

கொழும்பு டைம்ஸ் இன் பிரதம ஆசிரியரும் அராப் நியூஸ் இலங்கைக்கான தலைமை நிருபரு மான முஹம்மட் ரசூல்தீனால் கடந்த16 ஆம் திகதி கொழும்பில் அமைந்துள்ள இந்தியன் சம்மர் உணவகத்தில் இஃப்தார் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கையில் முன்னணி இணைய செய்தித் தளமாக விளங்கும் கொழும்பு டைம்ஸ் தற்போது ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் வெளியிடப்படுகிறது.

இந்நிகல்வில் பிரதம விருந்தினராக ஹனீப் யூசுப், சிறப்பு விருந்தினராக துணை சபாநாயகர் கலாநிதி ரிஸ்வி சாலிஹ் கலந்து கொண்டது டன் தலைமை ஊடகங்கள், தூதுவர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் மலேசிய உயர்ஸ்தானிகர், துருக்கி குடியரசின் தூதுவர், பாலஸ்தீன மாநிலத்தின் தூதுவர், மாலத்தீவு குடியரசின் உயர்ஸ்தானிகரகத்தைச் சேர்ந்த, வியட்நாம் சமூக குடியரசின் தூதுவர், மற்றும் ரஷ்ய கூட்டாட்சியின் தூதுவர் உள்ளிட்ட பல முக்கிய விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் முன்னாள் அமைச்சர்கள் அலி சப்ரி மற்றும் ஏ.எச்.எம். பௌஸி உட்பட பல்வேறு முக்கியஸ்தர்கள் ஒருங்கிணைப்பாளர் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் கனமூலைக்கு விஜயம் செய்த இந்திய தூதுவராலய உயர்ஸ்தானிகர்







(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

ஹூதா லங்கா (Hudha Lanka) நிறுவனத்தின் அழைப்பின் பேரில் செவ்வாய்க்கிழமை (17) புத்தளம் கனமூலை பிரதேசத்திற்கு இந்திய தூதுவராலய உயர் ஸ்தானிகர் எச்.ஈ சந்தோஷ் ஜா விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்தார்.

இதன் போது சுமார் 150 வறிய குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது. அத்தோடு கனமூலை பாடசாலையின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் தேவையான பௌதீக வளங்கள் தொடர்பான மகஜர் ஒன்றை பாடசாலை அதிபர் பீ.எம் முஹ்ஸியினால் உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப் பட்டது இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மற்றும் ஊர் பிரமுகர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.





ஶ்ரீலங்கா ஐக்கிய காங்கிரசின் கொழும்பு மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் கொழும்பு மாவட்ட உறுப்பினர்களுடனான கூட்டமும் இப்தார் நிகழ்வும் கொழும்பு மருதானை புட்லேன்ட் ஹோட்டலில் கட்சியின் உப தலைவரும் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான இஸ்ஸதீன் தலைமையில் நடை பெற்றது. இதன் போது உறுப்பினர்கள் சிலருக்கு நிதி உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டதோடு மகளிர் விவகார இணைப்பாளர் சிஹாமா, கொழும்பு கிளை இணைப்பாளர் கனி, மற்றும் மகளிர் இணை இணைப்பாளர் சிவயோஹினி உட்பட உறுப்பினர்கள் பலரையும் படத்தில் காணலாம்.





மாவனல்லை “லெக்ஸஸ் விளையாட்டு கழகமும் மாவனல்லை சமூக சேவை அமைப்பும் இணைந்து மஸ்ஜிதுல் ஹமீதியா ஜும்ஆ பள்ளிவாசலில் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு ஐக்கியமாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

(படம்:பாரா தாஹீர்)

# இஹலபுளியங்குளம் அந் நஹ்லா அஹதிய்யாவின் வருடாந்த இப்தார்




(எம்.ரீ.ஆரிப்)

அனுராதபுரம் இஹலப்புளியன் குளம் அந் நஹ்லா அஹதிய்யா பாடசாலையின் வருடாந்த இப்தார் நிகழ்வு அந்நஹ்லா பாடசாலையின் தலைவர் தேசமான்ய பீ.ஜாயிஸ் (உஸ்வி) யின் வழிகாட்டலில் அதிபர் எம்.ஆர்.எம்.ரனீஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பள்ளி பரிபாலன சபை உறுப்பினர்கள் இஹலபுளியன் குளம் முஸ்லிம் வித்தியாலய அதிபர் எஸ்.ரிபான் , ஹக்மன் பவுண்டேஷன் ஸ்தாபகர் ஏ.எம்.ஹலீம் மற்றும் அந் நஹ்லா பாடசாலையின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாணவி ஜே.எப். மிஸ்கா வின் ரமழான் பற்றிய சிறப்பு கவிதையும் மாணவி எம்.எம்.எப்.மனாலின் ரமழான் பற்றிய சிறப்பு உரையும் இடம்பெற்றது.

மேலும் அஹதிய்யாவின் மழை மாணவரும் ஜாமிய்யா நளீமிய்யா கலா பீடத்தின் மாணவனுமாகிய ரீ.எம்.அல்தாப் பின் விஷேட உரையும் இடம்பெற்றதுடன் நிகழ்வுகளை மாணவி என்.எப்.நிப்ரா தொகுத்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது.



அரபாத் பஹர்தீன்

# காலபந்து வரலாற்றில் மெஸ்ஸி புதிய சாதனை

உலக கால்பந்து வரலாற்றில் 900 கோல்களை அடித்த இரண்டாவது வீரர் என்ற பெருமையை ஆர்ஜென்டீனா அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி பெற்றுள்ளார்.
இன்டர் மியாமி அணியின் நட்சத்திர வீரரான மெஸ்ஸி , நாஷ்வில் எஸ்சீ அணிக்கு எதிரான போட்டியில் இந்த அரிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.
ஆட்டத்தின் ஏழாவது நிமிடத்தில் மெஸ்ஸியின் வரலாற்றுச் சிறப்புமிக்க கோல் அடிக்கப்பட்டது. 38 வயதான மெஸ்ஸி, மியாமி அணியில் இணைந்ததிலிருந்து 92 போட்டிகளில் 81 கோல்களை அடித்துள்ளார்.
மெஸ்ஸி பார்சிலோனா அணிக்காக 778 போட்டிகளில் 672 கோல்களையும், பிஎஸ்ஜி அணிக்காக 75 போட்டிகளில் 32 கோல்களையும் அடித்துள்ளார்.
மேலும், அவர் அர்ஜென்டினா அணிக்காக 196 சர்வதேசப் போட்டிகளில் 115 கோல்களை அடித்துள்ளார்.
அவர் அடித்த மொத்த 900 கோல்களில், 755 கோல்கள் அவரது இடது காலால் அடிக்கப்பட்டவை. தனது வலது காலால் 111 கோல்களையும், தலையால் முட்டி 30 கோல்களையும் அடித்துள்ளார்.
பெனால்டி மூலம் 112 கோல்களும், ஃப்ரீ கிக் மூலம் 70 கோல்களும் அடித்துள்ளார்.
ஸ்பானிய கழகங்களான செவில்லா, அத்லெடிக் கழகம் மற்றும் அத்லெடிகோ மெட்ரிட் ஆகியவற்றுக்கு எதிராகவே மெஸ்ஸி அதிக கோல்களை அடித்துள்ளார்.
கால்பந்து வரலாற்றில் மெஸ்ஸியைத் தவிர, 900 கோல்கள் அடித்தவர்கள் பட்டியலில் இடம்பெற்ற ஒரே வீரர் போர்த்துகல் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆவார்.
ரொனால்டோ இந்தச் சாதனையை 1,236 போட்டிகளில் நிகழ்த்தியுள்ளார்.
41 வயதான ரொனால்டோ தற்போது 959 கோல்களுடன் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# போட்டி அட்டவணையில் எந்த மாற்றமும் இல்லை பிபா



2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்து போட்டிகளுக்கான அட்டவணையில் எந்தவித மாற்றமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.
தனது நாட்டுப் போட்டிகளை மெக்சிகோவிற்கு மாற்றுமாறு ஈரான் விடுத்த கோரிக்கையே நிராகரிக்கப்பட்டுள்ளது.
ஈரான் மீதான அமெரிக்க – இஸ்ரேலிய போர்ச் சூழலைக் காரணம் காட்டி, அமெரிக்காவில் நடைபெறவுள்ள தமது போட்டிகளை மெக்சிகோவிற்கு மாற்றுமாறு ஈரான் கால்பந்து சம்மேளனத் தலைவர் மெஹ்தி தாஜ் கோரிக்கை விடுத்திருந்தார்.
ஈரானிய வீரர்களின் பாதுகாப்பிற்கு தன்னால் உத்தரவாதம் அளிக்க முடியாது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் அறவித்திருந்தார்.
இதனையடுத்தே, பாதுகாப்பு இல்லாத ஒரு நாட்டிற்கு தமது அணி வீரர்கள் செல்ல போவதில்லை என ஈரான் அறிவித்திருந்தது.
ஈரானிய அணியினருக்கு விசா வழங்குவதிலும், ஏனைய வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் அமெரிக்கா ஒத்துழைக்கவில்லை என மெக்சிகோவிற்கான ஈரானிய தூதுவர் குற்றம் சுமத்தியிருந்தார்.
எனினும் கடந்த வருடம் டிசம்பர் 6 ஆம் திகதி வெளியிடப்பட்ட போட்டி அட்டவணையின் படியே அனைத்துப் போட்டிகளும் நடைபெறும் என பீபா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.
2026 உலகக் கிண்ணத் தொடரின் முதல் போட்டி ஜுன் 11 ஆம் திகதி மெக்சிகோவிற்கும் தென்னாபிரிக்காவிற்கும் இடையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல் இல் புதிய விதி



இந்தாண்டு ஐபிஎல் சீசன் எதிர்வரும் 28 முதல் மே 31 வரை நடைபெற உள்ளது.
முதல் போட்டியில் பெங்களூரு – ஐதராபாத் அணிகள் மோதுகின்றன.
இதற்கிடையில், வட இந்தியாவில் மழை பெய்யும் வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.
குறிப்பாக ஏப்ரல் மாதத்தில் பல போட்டிகள் மழையால் பாதிக்கப்படக் கூடும் என கூறப்படுகிறது.
மழை காரணமாக போட்டி தடைப்பட்டால், கூடுதலாக 2 மணி நேரம் வழங்கப்படும். அந்த நேரத்திற்குள் முழு போட்டி நடத்த முடியாவிட்டால், குறைந்தது 5 ஓவர் போட்டி நடத்தி முடிவை தீர்மானிக்க முயற்சி செய்யப்படும்.
அதுவும் சாத்தியமில்லையெனில், சூப்பர் ஓவர் மூலம் வெற்றியாளர் தேர்வு செய்யப்படலாம்.
ஆனால், 5 ஓவர்களுக்குக் கூட போட்டி நடத்த முடியாத நிலை ஏற்பட்டால், அந்த ஆட்டம் ரத்து செய்யப்படும்.
அப்போது இரு அணிகளுக்கும் தலா 1 புள்ளி வழங்கப்படும்.
இறுதிப்போட்டிக்கு மட்டும் 'ரிசர்வ் டே' ஒதுக்கப்பட்டுள்ளது. மழையால் போட்டி நடத்த முடியாவிட்டால், அடுத்த நாள் நடைபெறும்.
அதிலும் போட்டி முழுவதும் ரத்து செய்யப்பட்டால், புள்ளிப் பட்டியலில் முன்னிலையில் இருக்கும் அணி செம்பியனாக அறிவிக்கப்படும்.
எவ்வாறாயினும் ஐ.பி.எல் வரலாற்றில் இவ்வாறான சந்தர்ப்பம் இடம் பெற்றதில்லை.

# சம்பியனானது தொட்டவத்தை அல் பஹ்ரியா மத்திய கல்லூரி

கல்வி அமைச்சின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 12 வயதிற்குட்பட்ட உதைப்பந்தாட்ட சம்பியன் ஷிப் 2025 களுத்துறை மாவட்ட போட்டித் தொடர் அண்மையில் களுத்துறை வெர்னன் யூ பெர்னாண்டோ கால்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்றது.
12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்டச் சம்பியன்ஷிப் போட்டியில், பாணந்துறை தொட்டவத்தை அல் பஹ்ரியா மத்தியக் கல்லூரி 2-1 என்ற புள்ளியில் வெற்றிபெற்று போட்டி முழுவதிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சாம்பியன்ஷிப் பட்டத்தைத் தட்டிச் சென்றது.
பேருவளை கோல்டன் கேட் சர்வதேச பாடசாலை இரண்டாம் இடத்தையும் களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.
இப் போட்டியில் அல் பஹ்ரியா அணி சார்பில் இளம் வீரர்களாக உமர், அப்துல் ஹாலிக், ரைஹான் அஹமட், ரகீப் அஹமட், ருஷ்தி, ஆதில், ஆதிப், யஃகூப், றிமாஸ், அஸா(ண)ம், பஹாம், நபீஸ், பர்ஹத் ஆகிய விளையாட்டு வீரர்கள் பங்குபற்றினர்.
இம் மாணவர்களுக்கு பயிற்றுவிப்பாளராக நிஸால்தீன் மாஸ்டர் கடமையாற்றியதுடன், பொறுப்பாசிரியையாக ஸபீனா ஆசிரியை கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.
மேலும் இதன் அடுத்த கட்ட நகர்வாக மாகாண மட்ட போட்டிகள் எதிர்வரும் 2026. 03. 28, 29 ஆம் திகதிகளில் கொழும்பு சுயஉந ஊழரசளந மைதானத்தில் நடைபெற உள்ளது. இத் தொடரிலும் இவ் இளம் வீரர்கள் வெற்றியடைந்து தமது பாடசாலைக்கும் ஊருக்கும் பெருமை சேர்க்க வாழ்த்துகிறோம்.

(இப்னு அஸாத்)

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.